
# புதிய உலகம்

கார்த்திகை
|
மார்கழி
1980

## ஒளி மலர்



# புதிய உலகம்

பூக்கும் நத்தார் — புது வருடத்தில்
புளகாங்கிதம் அடையும் எமது
அன்பு வாசகர்கள் அனைவருக்கும்
எங்கள் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

— ஆசிரிய, நிர்வாகக் குழுவினர்


நான்காவது ஆண்டு
மலர் – 24
கார்த்திகை – மார்கழி 1980

பொறுப்பாசிரியர் :
ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர் :
நாவண்ணன்

விநியோகப் பொறுப்பாளர் :
பிரான்சிஸ் டானியேல்

வெளியீடு :
இளஞ்சிவி சுவாமிப்பிள்ளை

தொடர்பு :
" புதிய உலகம், "
த பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

"PUTHIYA ULAGAM"
P. O. Box 2,
Jaffna.

விலை ரூபா 1-00 ஆண்டுச் சந். 6-00


சிந்தனையூட்டும் சஞ்சிகை

## புதிய உலகிலே...


| | பக்கம் |
|---|---|
| எமது பார்வை ... | 1 |
| அன்புச்சக்தி யேசு பிறந்தார் | 3 |
| மறை இயல் ... | 4 |
| சத்தியத்தின் சவால் ... | 6 |
| ஈடேற்றம் இல்லாத நெஞ். | 11 |
| சிறுவர் உலகு .. | 13 |
| சின்ன மனம் சிரிக்கிறது ... | 13 |
| உங்கள் கவனத்துக்கு ... | 18 |
| ஒளி பிறக்குமா? ... | 20 |
| நூல் ஆய்வு ... | 33 |
| அம்மா பசிக்குதே ... | 25 |
| வாழ்வில் ஒளியூட்டும் ... | 30 |
| மங்கை வாழ்வு ... | 34 |
| கருத்துமோதல் ... | 35 |
| பத். எழுத்தாளரை ஏமாற் | 40 |
| நொறுங்கிய இதயங்கள் ... | 42 |
| புதுமைப் பதில் ... | 47 |
| உங்கள் பார்வை ... | 49 |



படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே — ஆ—ர்

( FOR PRIVATE CIRCULATION ONLY )

## எமது பார்வை

# ஒளி பிறக்கும் நாள் எதுவோ?

**சமூகம்**

விலைவாசி நாளாந்தம் ஏறிக்கொண்டு போகின்றதே! காலையிலே கண்விழித்தவுடன் கவலையென்னும் அரக்கன் எம்மைக் கவ்விப்பிடிக்கின்றானே. சமுதாயத்தில் அமைதிகுலைந்து, சாதி மத வேறுபாடுகள் குவிந்திருக்கும் வேளையிலே எமக்கு விடிவு வருவது எப்போதோ? கொலையும், கொள்ளையும், களவும், விபத்தும் நிறைந்திருக்கும் நமது சூழலிலே ஒளி பிறக்கும் காலமெதுவோ? அறிவுக்கும், தகுதிக்கும் ஏற்ற வாறு வேலைவாய்ப்பின்றி வாழ்க்கை நடாத்தமுடியாமல் இருக்கும் இக்காலத்தில் மகிழ்ச்சி எவ்வாறு மலரும்?

**குடும்பம்**

குடும்பமென்னும் குட்டிச் சமூகத்திலே கட்டிய மனைவியும், பெற்ற பிள்ளைகளும் கைநீட்டிப் பிச்சை கேட்கும் பரிதாபநிலை தோன்றியுள்ளபோது தலைவன் எவ்வாறு தலை நிமிர்ந்து நிற்கமுடியும்? வீட்டுக்குச் சென்றால் வசைமாரி, வேலைக்குச் சென்றால் தலைவலி, சம்பள நாளிலேயே வெறுங் கையாக நிற்கும் தந்தையின் தனிமையான கோலத்திலே குடும்பமாய் இன்று வாழுவதெப்படி? வாங்கிய கடனைக் கொடுக்குமுன்பே மீண்டும் கடன் என்றால் வட்டி என்ன ஆகும்?

**சமயம்**

பணமும் பதவியும் போதும். பெயரும் புகழும் போதும். வேறென்ன வாழ்க்கை இவ்வுலகில் என்று படைத்தவனை மறந்து அலட்சியமாய் இருக்கும்போது மனிதன் ஒளியைக் காண்பதெப்படி? சிந்திக்கும் ஆற்றல் இழந்து மிருகமாக அவன் வாழும் போது மடமை என்னும் இருள் அவனைக் கவ்விக் கொள்ளுகின்றது. ஆண்டவனை ஆலய மதிலுக்குள் அடைத்துவிட்டு அமைதி தேடி அலைந்து திரியும் அறிவிலிகள் வாழும்போது உண்மை ஒளியைக் காணும் நாள் என்று வருமோ?

## ஒளியைத்தேடு

இருள் சூழ்ந்து நிறையும் போதும் அஞ்சாத நெஞ்சத்தோடு ஒளியை நோக்கி அடியெடுத்து வைப்பதே நம்முதற் பணி. ஏற்று ஒளியை — மாற்று உலகை என்னும் உறுதி மொழி பூண்டு ஒளிமயமான புது யுகத்தை உருவாக்கும் பணியே எமது கடமை. இருள் சூழும் பாதையிலே பயணம் செய்தாலும் ஒளியொன்று தோன்றும் வரை பயணம் செய்து, மாய்கையெல்லாம் மாற்றியெங்கும் மாற்றானைத் தோற்கடித்து ஏற்றிடுவோம் ஒளியெங்கும்.

## தோன்றி மறையும் ஞாயிறு

மாலையிலே மறைந்துவிடும் ஞாயிறு காலையிலே உதயமாகின்றதே. இரவிலே உறங்கியிருக்கும் உயிரினங்கள் பகலவனைக் கண்டதும் அக்களிப்பால் துள்ளியெழுந்து உலாவுகின்றனவே. சூரியன் உதயமாகும் நேரம் வரை பொறுமையோடு காத்திருக்கும் உழவரைப் போன்று உழைப்பில் உயர்வடைந்து உலகை உய்விக்க ஊக்கம் வேண்டும் எமக்கு.

## உண்மை ஒளி

மங்காது, மறையாது பொங்கியெங்கும் சுடர் வீசும் கதிரவனே இறைவன். மெய்ப்பொருளாய்— காலமெல்லாம் கண்களுக்கு மறைந்திருந்தாலும் கவலையெல்லாம் போக்கிடும் கலங்கரை விளக்காய் பிரகாசிப்பவனே பரமன். பாருலகைப் படைத்த பரம்பொருளைப் பார்ப்பதற்கும் கண்கள் வேண்டும். அது புறக்கண் அல்ல. அருள் ஒளி பெற்ற அகக்கண்ணே. ஆன்மாவின் அகக்கண்கள் ஒளி பெற்றால், அகிலமெல்லாம் ஆண்டவனை அடிபணிந்து அருள் சுரக்கும் ஒளிப்பிழம்பாய் வாழ்ந்திடுவோம் நாம்.

## ஒளி விழா

உலகிற்கு ஒளியாக உதித்திட்ட உத்தமனும் கிறீஸ்து பெருமான் எமக்கு வாழ்வளிக்க வந்தவரே. கிறீஸ்தவ உலகு பெரு மகிழ்வோடு கொண்டாடும் கிறிஸ்மஸ் விழா – ஒளி விழா என்றழைக்கப்படுவது பொருத்தமானதே. அன்பர்கள் அனைவருக்கும் ஒளி நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றோம்.

—யே. நீக்கிலஸ்

# அன்புச் சக்தி யேசு பிறந்தார்

துன்ப இருள் மூடிக்கிடந்தது — உலகில்
தூய்மை எங்கோ மறைந்து கிடந்தது
அன்பு எங்கோ ஆழ்ந்து துயின்றது — அதை
அருட்டிடவே யேசு பிறந்தார்

அடிமைத்தனம் ஓங்கி நின்றது
ஆணவத்தால் அழிந்து நின்றது
நீதி நிலை மாறி நின்றது — இவற்றை
நேர்ப்படுத்த யேசு பிறந்தார்

பல்லுக்குப்பல் கண்ணுக்குக் கண்தான்—என்றோர்
கல்லு மனம் கரைக்கப் பிறந்தார்
அல்லலுற்றோர் ஆதரவற்றோர் — நெஞ்சில்
அன்புமழை அமுதம் சொரிந்தார்

ஒளிபரப்பும் உதய சூரியன் — இந்த
உலகின் மீட்பன் யேசு பிறந்தார்
சமாதானம் அருளப் பிறந்தார் — அன்பு
சக்தி எங்கள் தேவன் பிறந்தார்

சுதந்திரம் நாம் பெற்றுவிட்டதால் — இனிச்
சோர்வு இல்லா வாழ்வு பெற்றதால்
கரதலங்கள் கூப்பி வாழ்த்துவோம் — தேவ
தேவன் எங்கள் யேசு பாலனை

'ஜீவசக்தி'




# கிறீஸ்து பிறப்பாரா?

கிறிஸ்து பிறந்தார் எனக் கூறுகின்றது வரலாறு. கிறிஸ்து ஏன் பிறந்தார் என விளம்புகின்றது விவிலியம். கிறிஸ்து மீண்டும், மீண்டும் பிறக்க வேண்டும் என முழக்கமிடுகின்றது எம் திருச்சபை. இத்தனை எதிரொலிகளுக்கும் மத்தியிலே கிறிஸ்து மீண்டும் பிறப்பாரா? என சந்தேகக் கண்களுடன் நோக்குகின்றது தற்கால நவீன சமுதாயம்.

மேற்கூறிய அனைத்தையும் எம் நெஞ்சத்தில் கேட்கும்போது அங்கு எழுகின்ற, சிதறுகின்ற சிந்தனைகள் சிலவற்றை இங்கு ஒன்று சேர்க்க விழைகின்றோம்.

பற்பல முறையிலும் பல்வேறு வகையிலும் இறைவாக்கினர் வழியாக முற்காலத்தில் முன்னோரிடம் பேசிய இறைவன் இறுதியாகத் தமது இறைமகன் மூலமாகக் காலம் உள்ளவரை வாழும் மனிதரோடு பேச முனைகின்ற அற்புத செயல்தான் அமலன் யேசு அவனியிலே அவதரித்ததாகும். எம் கிறீஸ்தவ மறைக்குள்ள தனிச்சிறப்பு இவ் உன்னத நிகழ்ச்சியில் துலங்குகின்றது. மனிதன் இறைவனைத் தேடிச் செல்வதற்குப் பதிலாக இறைவனே மனிதனை நாடி வந்தார். நாடிவந்த இறைமகன் வழியாக நானிலத்தில் வாழும் மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சி பொங்கும் நற்செய்தி வழங்கப்பட்டது.

''உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார். அவரே ஆண்டவராகிய மெசியா'' இந்த நற்செய்தி அனைவர்க்கும் உரித்தானது என்பதை எரேமியாஸ் இறைவாக்கினர் எடுத்தியம்பிய வார்த்தைகளில் இருந்து புலனாகின்றது.

★ அருள்திரு பி. அன்ரன்
சின்னராசா அடிகள்

''இனி வாழ்வில் துன்பம் இல்லை. கன்னிப் பெண்கள் நாட்டியமாடிக் களிப்பார்கள். இளை

ஞரும், முதியோரும் அவ்வாறே மகிழ்வார்கள். அவர்களுடைய அழுகையை அக்களிப்பாக மாற்றுவோம். அவர்களைத் தேற்றித் துயரத்தைப் போக்கி அவர்களை மகிழச் செய்வோம்.

ஆகவே கிறிஸ்து பிறப்பானது மேற்கூறியவற்றை இந்த உலகத்திலே உருவாக்க வழி சமைத்து விட்டது. இந் நற்செய்தியானது முதலில் அறிவிக்கப்பட்டது ஆடு மேய்க்கும் ஆயர்களுக்கே. இவர்களே மீட்பின் செய்தியை அனைவரிலும் முதலாக அறிந்து கொள்ளும் பேற்றைப் பெற்றனர். இப் பெருமையைப் பெற்றதற்கு அவர்கள் எதையும் சாதிக்கவில்லை. ஆனால் பரமன் பாவிகளையும் ஏழைகளையும் திறமையான முறையில் தெரிந்து கொண்டார். பிறப்பில் மட்டுமல்ல வாழ்விலும், சாவிலும், உயிர்ப்பிலும் கூட அவர்களை ஆண்டவன் அழைத்துள்ளார்.

அமலன் பிறப்பு அவனியில் வாழும் மாந்தருக்கும், இறைவனுக்கும் ஒரு புதிய நட்புறவை நிலைநாட்டியது. ஆகவேதான் அம் மகிழ்ச்சியால் களிப்புற்றவளாக "அன்னையர்களுக்கெல்லாம் அன்னையாக விளங்கும் மரியாள் பின்வரும் பாடலைப் பாடினாள்.

"என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களி கூருகின்றது. ஏனெனில் தாழ் நிலை நின்றதம் அடியவரைக் கடைக்கண்நோக்கினார்.

இதோ இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே. ஏனெனில் வல்லமை மிக்கவர் எனக்கு அரும் பெரும் செயல் பல புரிந்துள்ளார்.
அவர் தம் பெயர் புனிதமாகும்.

கிறிஸ்துவின் பிறப்பு மரியாளுக்கு மனநிம்மதியை ஏற்படுத்தவில்லை. ஆயினும் இறைவனைப் புகழ்ந்து பாடினாள்.

மைந்தனின் பிறப்பு மரியாளுக்கு இன்று மகிமையைக் கொடுக்கின்றது. ஆனால் அன்று பிறந்த மகவோடு இரவோடு இரவாகத் தாய்த்திருநாட்டையே விட்டு ஓடச் செய்தது. அந்நிய நாட்டிலே அகதிகளாக அத்திருக்குடும்பம் ஒருசிலகாலம் வாழ்ந்ததாக நற்செய்தி கூறுகின்றது.

ஆகவே நாம் வாழும் சூழ்நிலையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட, பிரச்சனைகள் இல்லாத அமைதி நிறைந்த காலகட்டத்தில் அவர் பிறக்கவில்லை. மாறாக அமைதியற்ற சூழ்நிலையிலேயே அவர் பிறந்தார். ஏழ்மையின் மத்தியிலே அவர் பிறந்தார். சுருங்கக் கூறின் இன்று நாம் பிரச்சனைகள், தலையிடிகள், விரும்பத்தகாதவை என்று எதை கருதுகின்றோமோ அவை அனைத்தின் மத்தியிலும்தான் கிறீஸ்து பிறந்தார். ஆகவே இன்றும் கிறீஸ்துவை நாம் எதிர்பார்க்கலாம். அவர் பிறந்து கொண்டே இருக்கின்றார்.

# சத்தியத்தின் சவால்

— உரும்பையூர் ஞா. வி. ஜெகநாதன் —

"அக்கா கலியாணம் செய்யாமல் வீட்டிலே இருக்கிறு. நான் என்னெண்டு கலியாணம் செய்யிறது...அக்கா பாவம்"

"நீ என்னை இன்னும் விளங்கிக் கொள்ளேலே. நானும் மனிசன் தான். எனக்கு அப்பர் இல்லே. அம்மாவும் ஒரு விபரமில்லாத மனிசி. பள்ளிக்கூடம் போற சகோதரங்களைப் பாக்க ஆக்களில்லே. இது உனக்குத் தெரியுந் தானே".

"நீங்களும் மற்றவேன்ரை உணர்ச்சியளுக்கு மதிப்புக் குடுக்க வேணும். அக்காவுக்கு வயது போய்க்கொண்டிருக்குது. சீதனப் பிரச்சினை வேறை. மூத்தவள் இருக்க இளையவள் கலியாணம் செய்தால் மூத்தவளை மதிப்பாய்க் கட்டிக் குடுக்க ஏலாது. இந்தச் சமூகம், பெண் பாக்க வாறவை எத்தினையை யோசிப்பினம்? எத்தினையைச் சோடிப்பினம்"

"உனக்குநான் பெரிசோ, உங்கடை தாய்தேப்பன், அக்கா பெரிசோ"

"நீங்கள் ஏன் அப்பிடிப் புறிச்சுக் காட்டிப் பேசிறியள். தமக்கையிருக்க எந்தத் தாய்தேப்பன் இளையவளுக்குக் கலியாணம் செய்து வைப்பினம். அதுகும் அக்கா இருக்கேக்கை ஆர் எனக்குச் சீதனம் தருவினம். அப்பு இதுக்குச் சம்மதிக்க மாட்டார்.

"சீதனப் பிரச்சினையை இப்ப ஏன் இழுக்கிறுய். இருக்கிறதைக் கொண்டு வா. உங்கடை வீட்டுக்காரர் நகை நட்டெல்லாம் வாங்கி வச்சிருக்கினம்"

"அப்ப அக்கா...அதுபாவம். அக்காவுக்கெண்டு சேர்க்கிறதை!"

"அப்பிடியெண்டால் என்னை வேண்டாமெண்டு சொல்லு. உனக்கு என்னுடை வாழுறது சம்மதமெண்டால் நான் சொன்னபடி செய். இல்லாட்டில்..."

தனக்கும் தன் காதலனுக்கும் இறுதியாக நடந்த அந்த உரையாடலை அவள் அசைபோட்டுப் பார்த்துக்கொண்டிருந்தாள். காலை பத்துமணிபோல சட்டிபானைகளைக் கழுவிக்கொண்டிருந்த அவள் தன்னையே மறந்து முழங்காலில் நாடியைப் பதித்தபடி அசைவற்றிருந்தாள்.

படார்...படார்...கனகரயான் பிடித்த வேலியைப் பக்கத்து வீட்டுக்காறி தடியால் அடிக்கும் சத்தம் அவளைச் சுயநினைவுக்குக் கொண்டுவந்தது.

மீண்டும் பழைய நினைவுக ளால், குற்ற உணர்வுகளால் அவள் மனம் வருந்தினாள். அக்காவிருக்கத் தான் திருமணம் செய்துகொண்டதை.... அதை விட அக்காளுக்கென்று சேர்த்து வைத்த நகைநட்டுக்களுடன் தான் ஓடிவிட்டதை... அக்காள் துடித்த துடிப்பை...விட்ட கண் ணீரை.....

ஏதோ ஒரு பெரும்சுமை இத யத்தை அழுத்திப் பிழிவதைப் போலிருந்தது கமலத்திற்கு. மனச்சாட்சிக்கு அவளால் தப்ப முடியவில்லை. குற்ற உணர்வு அவளைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தது.

அக்காவிற்குத் திருமணம் நடக்கும் வரை அவள் அந்தக் குற்ற உணர்வுகளில் இருந்து விடுதலை பெறமுடியவில்லை. அக்காவின் திருமணத்தின் பின் தான் தன் வாழ்வில் நிம்மதி கிடைக்கும் என்று அவள் கருதி னாள். ஆனால் அக்காவின் திரு மணத்தின் பின்தான் தன்வாழ் வில் துன்பத்தின் அத்தியாயம் ஆரம்பமாகவிருப்பதை அவள் எதிர்பார்க்கவில்லை.

கமலம் பிரார்த்தித்ததுபோல் அவளுடைய அக்காவிற்குத் திரு மணம் நடந்தது. கஷ்ரப்பட்டு கடன்பட்டு, உருட்டித்திரட்டி வீடுவாசல், நகைநட்டு என்று சுமாராகக் கலியாணம் முடித் தது. அக்காவின் திருமணத்திற் குத் தன்னையும், தன் கணவனை யும் பெற்றோர்கள் புறக்கணித்து விடுவார்களோ என்ற ஏக்கமே இல்லாமல், பெருங்குணத்தோடு பெற்றோர்கள் தன் குடும்பத்தை யும் அழைத்துக் கொண்டது அவளுக்கு எவ்வளவு ஆனந்தம். எடுத்ததுக்கெல்லாம் ''யேசுவே'' என்று பிரார்த்தித்துக் கொண் டதன் பலனை அவள் நன்றி யோடு நினைவு கூர்ந்தாள்.

இனித் தனக்கொரு குறையு மில்லையென்று நிம்மதிப் பெரு மூச்சு விட்ட நேரத்தில் சுயமைத் தனம் என்ற புற்றுக்குள் இருந்த சீதனம் என்ற நஞ்சுப்பாம்பு கணவன் என்ற உருவத்தில் தன் னைத் தீண்டியபோது அவள் அதிர்ந்து வேதனையால் துடித் தாள். அடி, உதை, ஏச்சு என்று இப்படி அவள் துடிதுடித்தாள். விரக்தியின் விளிம்பில் அவள் விழிகலங்கினாள். வாழ்க்கை என்ற புத்தகத்தில் புதிய புதிய அத்தியாயங்களை அவள் சந்தித் துக் கொண்டிருந்தாள். சிரித்துச் செழித்த அவளது வதனத்தில் கவலையின் கோடுகள் புரையோ டிப் பொலிவைக் கெடுத்தன. அவள் இப்போதும் சிரிக்கின்றாள் ஏனோ செழிப்பில்லை.

''தாய்தேப்பன் பிள்ளையளுக்கு ஒருகாலும் வஞ்சகம் செய்யக் கூடாது. ஒரு பிள்ளைக்குச் சீதனம் கூடக் குடுத்து மற்றப் பிள்ளைக்குக் குறைச்சுக் குடுக்கிறதே. கொக்காளுக்கு வீடு, நகை, காசு எண்டு குடுத்தவே உனக்கும் அப்பிடித்தரேலே''.

''ஏன் நான் நகையள்கொண்டுவந்தனுன்தானே?''

''அடி, அது காணுமேடி''

''உதைத்தானே நான் காதலிக்கேக்கை சொன்னனான். அதுக்கிடேலை நீங்கள் அவசரப்பட்டு''

''எடியே பொத்தடி வாயை. நான் என்னடி குறைஞ்சாளே? மாதச்சம்பளகாரனடி. அரசாங்க உத்தியோகத்தன். உன்ரை தாய்தேப்பன் அதை யோசிக்கேலே. ஆகக் கலியாணம் செய்யேக்கைதான் சீதனம் குடுக்கிறதே. ஏன் இப்பவும் தரலாந்தானே. கிடக்கிற காணியிலை உனக்கும் எழுதச் சொல்லன்''

''அப்ப அவள் கடைசித் தங்கச்சியை என்ன செய்யிறது. மனிசருக்கு மனச்சாட்சிவேணும்'

''எடி கழுதை, மனச்சாட்சியைப்பற்றி எனக்குச் சொல்லுறியே? என்ரை தகுதி என்ன? அறிவு என்ன சொல்லடி பாப்பம்? மண்டு. நீ சரியெண்டால் எல்லாம் நடக்கும். சொல்லிப் போட்டன் இனிமேல் உன்ரை தாய்தேப்பன் வீட்டை போகக் கூடாது. போனால் சீதனத்தோடை வா. இல்லாட்டில் பிறகு தப்ப மாட்டாய்''

இப்படி வாழ்க்கை என்ற ஓடத்தின் மேல் மோதும் புதிய துன்ப அலைகளால் அவள் தாக்குண்டு வருந்தினாள். அழுதழுது கண்ணீரே வறண்டு விட்ட நிலை.

காலம் கடந்து கொண்டிருந்தது. ஆனால் ஒவ்வொரு வினாடியும் விடியாத யுகம்போல் இருந்தது. நோயுற்றுப் பாயும் படுக்கையுமாகக் கிடக்கும் தன் தாயாரைப் பார்க்கப் போக வேண்டுமே என்ற பாசத்துடிப்பு ஒருபுறம், போகக்கூடாது என்ற கணவனின் அதிகாரக்கோடு மறுபுறம். இவ்விரண்டிற்குமிடையில் அவளின் தவிப்பு.

வாழ்க்கை, குடும்பம், உறவுகள் எல்லாம் ஒரு மாயைபோல் தோன்றியது அவளுக்கு. ஒரு கணவனுடைய கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டு ஒரு பெண்ணால் எத்தனை காலத்திற்கு வாழ்க்கை நடத்த முடியும்? அப்படிப்பட்ட கணவனோடு இருந்து வாழ்வதற்கு ஒரு பெண்ணை நிற்பந்திப்பதென்ன? என்ற கேள்விகளே அவள் நெஞ்சில் அலை போல் மோதிக்கொண்டிருந்தன.

காதலும் வேண்டும், கலியாணமும் வேண்டும், சீதனமும் வேண்டும். அப்படியென்றால் உறவுகள் நிர்ணயிக்கப்படுவது பணத்தில்தான் போலும். திருமணங்கள் சொர்க்கத்தில் நிர்ண-

யிக்கப்படலாம். ஆனால் உறவுகளைக் கட்டிக்காத்து நிரந்திரப்படுத்துவது...?

''இல்லானை ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்'' என்பது போன்ற சிந்தனைகள் அவளுள் விசுபரூபம் எடுத்தன.

ஆணும் பெண்ணும் அன்றாடம் அடித்து, அன்பாக வாழ்க்கை நடத்துவதை அவள் பார்த்து அங்கலாய்த்தாள். குடும்பத்தில் பல பிரச்சனைகள் எழுந்த போதும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு பணத்தினால் அவர்கள் சண்டை பிடிபடுவதில்லை என்பதைத் தன்னுடைய வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்த்தாள்.

இறுதியாக அவள் ஒரு திடமான முடிவுக்கு வந்தாள். கிறிஸ்மஸ் விழாவிற்கு முதல் நாள் தாயை எப்படியும் பார்த்து விடுவது என்ற ஆவலைப் பூர்த்தி செய்துகொண்டாள். இது எப்படியோ கணவனுக்குத் தெரிந்துவிட்டது. அவன் மிருகமாக மாறினான். ஏசினான், அடிக்குமேல் அடி அடித்தான். அவள் வாய்விட்டு 'ஐயோ' என்று அலறும் வரை அடி நடந்தது.....

இதுவரை காலமும் கணவனோடு எதிர்த்து அடிபிடிப்படாத சுப்பம்முடைய கமலம் எப்படித் துணிந்தாளோ தெரியவில்லை. கண்களில் கண்ணீர் வடிய அழுதுகொண்டு, தலைவிரிகோலத்தோடு எரிமலையாய்க் குமுறினாள். ''அடியுங்கோ. உங்கடை மிருகத்தனம் அடங்குமட்டும் அடியுங்கோ. என்னைச் சாக்காட்டி விடுங்கோ. இரண்டு பேருக்கும் நிம்மதி. உங்களுக்கு மனச்சாட்சி, மனிதாபிமானம், இரக்கம் இருந்தால் இப்பிடிச் செய்வியளே. இன்னும் நாலைஞ்சு பிள்ளையளைப் பெத்துப்போட்டுச் சீதனத்துக்குச் சண்டைபோடுங்கோ. உங்களோடை இருந்து அணுவணுவாகச் சாகிறது காணும். இனியும் என்னாலை பொறுக்கேலாது. காதலிக்கேக்கை அதை இதைச் சொல்லிக் காரியத்தை முடிச்சுப் போட்டு இப்ப என்ன செய்யிறியள்? நீங்கள் ஒரு பணப்பிசாசு. பணத்தாலை உறவைக் கட்டி வளர்க்கப் பாக்கிறியள். அப்பிடியான உறவோ வாழ்க்கையோ எனக்கு வேண்டாம்.

உங்கடை எடுபிடி வேலைசெய்யவும், உடல்பசியைத் தணிக்கிறத்துக்குந்தான்தானே நான் இருக்கிறன்? உங்கடை சாப்பாட்டிலை நான் சீவிக்கிறன் எண்டதாலைதானே இந்த வேலை செய்யிறியள். நான் இனி உங்களோடை சீவிக்கேலாது. வெயிலடிச்செண்டாலும் நான் உழைச்சுத் திண்டிட்டு நின்மதியாக இருப்பன். உங்கடை கொடுமையளைச் சகிச்சுக்கொண்டு நிம்மதியில்லாமல் நான் மனமெரியிறதிலும் பாக்க என்ரை உணர்ச்சிகளை

அடக்கிக்கொண்டு, கஷ்ரப்பட்டு உழைச்சுச் சந்தோஷமாய்ச் சீவிக்கிறதுக்கு என்னாலை ஏலும். அண்டண்டு அடிச்சு வாழுறவங்கள் தங்கடை மனிசியளை எவ்வளவு சந்தோஷமாக வைச்சிருக்கிறாங்கள். உங்களிட்டை நான் எதிர்பார்த்ததெல்லாம் அந்த அன்பு வாழ்க்கைதான். அதை உங்களால தரேலாமல் போச்சு. உங்கடை அறிவு, முற்போக்கு எல்லாம் எனக்குச் செய்த சித்திரவதை காணும். நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன். இனி உங்களோடை இருக்கிறதெண்டால் சீதனக்கதையோ, அடி உதையோ இருக்கக் கூடாது. அப்பிடியில்லையெண்டால் என்ரை கலியாண எழுத்தைத் தள்ளி விடுங்கோ. அவ்வளவும் காணும் இதுதான் என்ரை முடிவு''.

கனவில்கூடக் கருதாத கடுமையான வார்த்தைகள் அவன் மனைவியிடமிருந்து கனலாகத் தெறித்தது. அவளின் பேச்சு, சவால் சத்தியத்தின் பேச்சாக சவாலாக இருந்ததை அவன் உணர்ந்தான். அவனுக்கு என்ன சொல்வது, என்ன செய்வது என்று எதுவுமே தெரியவில்லை. சுவாலித்து எரியும் அவளுடைய சத்திய வேட்கைக்கு முன்னால் தான் ஒரு புழுவாகத்துடிக்கும் பெலவீனத்தையும் அவன்உணர்ந்தான். அவனுடைய தன்மானங்கூட கூனிக் குறுகிச் செயலிழந்தது. மலைபோல் வளர்ந்துவிட்ட தன் தவறுகள் பிளந்து உடைந்து, நொறுங்கிப் பொடிப் பொடியாகத் தரைமட்டமாவது அவன் மனக்கண் முன் தோன்றியது.... அவள் விடுத்திருக்கும் சவாலை ஏற்பதா? விடுவதா? என்ற சங்கடங்கூட அவனுக்கு எழவில்லை.....அவன் மௌனமாக அவளையே வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்றான்.

நாளை மலரப்போகும் கிறிஸ்துவின் பிறப்புவிழாவை அவன் நினைத்துக் கொண்டான் 'உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை. பூமியிலே நல்மனத்தோர்க்கு அமைதி' என்ற வானகத்துக் கானம் அவன் காதுகளில் ஒலிக்கிறது.

அவளுக்குக் கூட அவன்மௌனம் சங்கடத்தை ஏற்படுத்தியது. தன் கணவன் என்னமுடிவு செய்கிறான் என்பதைக்கூட அவளால் ஊகிக்க முடியவில்லை. அவள் கண்கள் மட்டும் கண்ணீரைச் சிந்தியது...

அவளைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. இருவரது பார்வைகளும் சங்கமமாகின்றன. அந்தச் சங்கமம் சத்தியத்தில் சரணடைகிறது.

# ஈடேற்றம் இல்லா நெஞ்சில்

(தமிழ்ச் செல்வன் மாசிலாமணி)

உண்மைஒளி உயிராக விளங்கும் ஏசு
ஓங்குகதிராய் ஏழ்மையிலே பிறந்த நாளை
மண்ணகத்தோர் மந்திகளாய் மகிழ்வுடனே
மனமொன்றி கொண்டாடு கின்றோம்; ஆயின்
உண்மையிலே இறைவடிவம் கண்டு தானே
ஒளிமகனை வெளிப்படுத்தி மகிழு கின்றோம்
நன்மையென அதையெண்ணி பார்த்து ; மீட்பர்
நம்மனதில் பிறக்கவழி காண வேண்டும்

ஏசுபரன் பிறந்தநாள் நெருங்கி விட்டால்
எத்தனையோ அலங்காரம் ; எதிலும் துடிப்பு
தூசுதட்டி சுவர்க்குப்பல வர்ணம் தீட்டி
சுந்தரமாய் இல்லமெலாம் மிளிரும்; ஆனால்
மாசுபட்ட எம்மிதய வீட்டைப் பார்த்து
மாசகற்ற நாமென்ன செய்தோம்? உள்ளே
நேசபரன் பிறந்திடவே குடில மைத்து
தாழ்ச்சியெனும் மெத்தையினை விரித்தா
வைத்தோம்!

கடமையினை ஆற்றுமல் உரிமை பேசும்
கயமையினை மாற்றினேமா? கவனத் தோடு
உடல்நலத்தைப் பேணுவது போல ஆன்ம
ஒழுக்கநெறி தனைக்காத்து நடக்கின் றேமா?
குடல்நிரப்பும் பணியினிலும் தன்னைப் பேணி
கொள்ளையடிக் கின்றேமே நேர்மை யற்று!
மடமையெனும் இருளினிலே மூழ்கி, நாமும்
பெயரளவில் கிறிஸ்தவனாய் வாழு கின்றேம்!

சாந்திக்கு வழிவகுத்த யேசு வழியை
சற்றேனும் பின்பற்ற மறந்தே விட்டோம்!
வாந்தியெடுக் கின்றேமவர் கருத்தை ; ஆனால்
வணக்கமுடன் அதைமனதில் நாட்ட வில்லை
மந்திமனம் படைத்தவனாய் கொள்கை விட்டு
மதுவினிலும் மங்கையிலும் மயங்குகின்றேம்!
ஆந்தைக்கு இரவுபார்வை பகலில் இல்லை
அநேகருக்கு யேசுபேச்சு : மனதில் இல்லை!

நன்மையெலாம் நிறைந்தவராம் யேசு மீட்பர்
நமக்களித்த மலைப்பொழிவைப் பற்றி ஞேமா?
ஒன்மைமிகு அவர்வடிவம் காட்டி நிற்கும்
ஒப்பில்லா அன்புவழி நடக்கின் ருேமா ?
தன்னைப்போல் பிறனையும் நேசி என்ற
தர்ப்பரனின் சொல்கேளோம் ; நாளும் சாதி!
எண்ணத்தில் ஈடேற்றம் இல்லை ; இந்த
இலட்சணத்தில் யேசுவந்து எங்கே பிறப்பார்?

# ஒளி உதித்தது

— உயிலூர் ஏ. பீற்றர் ராஜன், —

மார்கழி இரவிலே மாபெரும் குளிரிலே
மாடடை குடிலிலே மாமரி வயிற்றிலே
மானிடன் உருவிலே மாசனுகாமலே
மனுமகன் யேசு அவதரித்தார்

வானவர் கீதங்கள் பாடிடவே
ஆயர்கள் தேடி ஓடிடவே
ஆடுமாடுகள் புடை சூழந்திட்வே
ஆண்டவன் யேசு அவதரித்தார்

மண்ணவர் பாவம் போக்கிடவே
மாந்தரை விண்ணகம் சேர்த்திடவே
உண்மை நீதியை நிலைநாட்டிடவே
ஒளியாம் யேசு அவதரித்தார்

# சிறுவர் உலகு

## இலங்கை பாடசாலைச் சிறுவர்களுக்கு

# மும்மொழிக் கல்வியின் அவசியம்

இன்றைய உலகில் சிறுவர்களே கண்களாய் இருக்கின்றார்கள். காரணம் எதிர்காலத்தில் ஒரு திருப்திகரமான சமுதாயத்தை உருவாக்க உள்ளவர்கள். அத்தோடு இவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மும்மொழிக் கல்வி அவசியமாகின்றது. மும்மொழிக் கல்வியெனும் போது எம் நாட்டைப் பொறுத்த வரையில் தமிழ் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிக் கல்விகளுமாகும். சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், மனித வாழ்வுக்கும் இன்றியமையாததாகும்.

இம் மும்மொழிக் கல்வி இன்மையால் இன்று எத்தனை பூசல்கள் ஏற்படுகின்றன. உதாரணமாகத் தமிழ் மக்கள் தமிழ் மொழியை மட்டும் கற்பார்கள் என்றால் சமுதாயத்தில் வர்க்க பேதம் தோன்ற வழி வகுக்கும். இன்று பார்க்கும் போது எந்த நாட்டிலும் எத் தொழில் துறைகளுக்கும் மும்மொழிக் கல்வி தேவைப்படுகின்றது. தமிழ் தெரிந்த ஒருவர் வியாபாரத்திற்கு அல்லது வேறு தேவையொன்றுக்குத் தமிழ் அல்லாத நாடொன்றுக்குச் சென்றால் அங்கு ஏனைய மொழி (சிங்களம், ஆங்கிலம்) பேசுபவர்களே இருப்பவர்களாயின் இவர் ஒருமொழியை மட்டும் கற்றதில் பயனில்லை. ஆகவே தற்காலத்தில் பாடசாலைச் சிறுவர்களுக்கு மும்மொழிக் கல்வி கற்றுக்கொடுக்கப்படுகிறது. ''கல்வி கரையில கற்பவர் நாள் சில'' அதனால் கல்வி கற்கும் சிறுவர்கள்வாழ்வு வளம் பெறத்தக்க கல்வியைக் கற்றல் அவசியமாகின்றது. அத்தகைய கல்வியே சமூகங்களை மலர்

வித்து நாட்டை உயர் நிலையடையச் செய்யுங் கல்வியாகவும் அமைகிறது.

இலங்கையில் இருக்கும் பாடசாலைச் சிறுவர்களுக்குப் பண்பாடு, அறிவு, ஆற்றல் இருந்த போதும் அதிகமானோர் தனது தாய் மொழியை மட்டுமே படிக்கின்றார்கள். இதிலே அதிகவிருப்புக் காட்டி ஏனைய மொழிகளை வெறுக்கின்றனர். கடைசியில் உயர் கல்வியைக் கற்கத் தொடங்கும் போதுதான் ஏனையமொழியின் பயன் அவசியமாகின்றது. அப்போது தான் இம்மாணவர்கள் பெரிய பாதிப்புக்குள்ளாகின்றார்கள். தான் கற்காத மொழியில் இருக்கும் பாடத்தையோ அல்லது நூலொன்றையோ கற்க வேண்டியதாக இருந்தால் அம்மொழி தெரிந்திருக்க வேண்டும். அப்போதுதான் மொழி பெயர்த்து அறிந்து கொள்ள முடியும். அதனால்தான் இன்று பாடசாலைச் சிறுவர்களுக்கு மும்மொழிக் கல்விபயிற்றப்படுகின்றது.

இலங்கைக்கு இம் மும்மொழிக்கல்வி எவ்வாறு புகுந்ததென்று ஆராய்வோமாயின் அந்நியர் வருகையும், அவர்களின் ஆட்சியினாலும் என்று கூறலாம். ஒவ்வொரு காலத்திலும் எம் நாட்டில் தமிழர், சிங்களவர், ஆங்கிலேயரின் ஆட்சி நிலவியது. அதனால் எமது நாட்டில் இம்மூன்று மொழிகளுமே முக்கியம் பெறுவதாயிற்று. எம் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு அரசு கல்வி முறையில் மாற்றம் செய்து பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்பனவற்றில் மாணவர்களுக்கு மும்மொழியிலும் தற்போது கல்வி புகட்டுகின்றனர்.

நாட்டு நலன் பயக்கும் கல்வி முறையின் பண்புகள் எவை என என்று பார்த்தோமென்றால் முன்னேற்றத்துக்குக் காரணியாய்ப் பெரும் பங்கை வகிப்பன எமது புதிய கல்விமுறைப் பண்புகளாகும். அப்பண்புகள் சார்பாகவிரியும் சிந்தைகள் இன்றைய நிலையில் நம் நாட்டுக் கல்வி பொருளாதாரப் பெருக்க நிலைக்குதவவல்லதாக அமைதல் வேண்டும். கல்வி முறையினால் ஏற்படும் பயிற்சிகள், ஆற்றல்கள், விளைவுகள், உளச்சார்புகள் என்பன சமூகப் பொருளாதாரச் சூழலுக்கமைய இணைவுறுத்தப்படல் வேண்டும். நாட்டுக்கேற்ற நல்ல பண்புகள் நிறைந்த இத்தகையதொரு கல்வி முறை உருவாக

> பிறரிடம் இருக்கும் எந்தக்குணத்தை நீங்கள் வெறுக்கிறீர்களோ, அந்தக் குணத்தை உங்களிடம் அண்டவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.
>
> — ஸ்பிராட்

வேண்டுமெனில் பாடசாலையில் மும்மொழிக் கல்வி போதிக்கப் படல் அவசியம். நாட்டின் அபி விருத்திக்குரிய ஆற்றல்களும், திறமைகளும் கருத்திற் கொள் ளப்படல் வேண்டும். புதியகல் வித் திட்டத்தின் முக்கிய அம் சங்களில் ஒன்றுகும் சிறுவர்க ளுக்கு மூன்று மொழியையும்கற் பிப்பது. சிறுவயதிலே இம்மூன் றையும் படித்துக் கொண்டார்க ளென்றுல் பாடசாலையை விட்டு வெளியேறும் போது தொழில் வாய்ப்புக்களைத் தேடிக் கொள் வதற்கு ஏதுவாக இருக்கும்.அது மட்டுமல்லாது நாட்டில் சமத்து வமாய் வாழக்கூடிய நிலையொன் றும் உருவாகின்றது.

இன்றைய சிறுவர் கல்வியில் நல்ல கல்வி முறை உருவாக்கப் பட்டதுடன் அன்னிய மொழி கற்கக் கூடியதாகவும் இருக்கின் றது. அத்துடன் எல்லார்க்கும் சமனகப் படிக்கக் கூடிய வசதி களும் அமைந்திருக்கின்றன. நல்லதொரு கல்வி நிலையமே நல்லதொரு எதிர்கால சமுதா யம் தோன்றுதற்குரிய வித்தா கும்.

இக்கல்வி மனிதன் பூரண வளர்ச்சியடைவதற்குப் பெருந் துணையாக விளங்குகின்றது. மனிதன் உலகியலை அறிதற்கும் இயற்கையாற்றலை அடக்கியா யாண்டு தனக்கும் பிறர்க்கும், பயனளிக்கும் வகையை அறிதற் கும் இம் மொழி வளர்ச்சிபெற்ற வனுதல் வேண்டும். அறிவு,மனம் என்னும் இரண்டினதும் ஒரு மித்த வளர்ச்சியே மனிதனது பூரண வளர்ச்சியாகும். ஒன் றைப் புறக்கணித்து ஒன்றைப் போற்றுவதால் உண்மையான வளர்ச்சி ஏற்படாது. அதே போல் ஒரு மொழியைப்போற்றி இன்னொரு மொழியைப் புறக்க ணிப்பதால் ஒருவரின் மொழி வளர்ச்சியில் திருப்பம் காண முடியாது.

★ எம். விக்டோரியா மனுவேல்

---

**தை — மாசி 1981**

## பொங்கல் மலர்

*31—12—1980* முன்னர் உங்கள் ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்

---

**பங்குனி—சித்திரை 1981**

## குறிஞ்சிச் சிறப்பு மலர்

மலையகத் தொடர்புடைய ஆக்கங்களை அனுப்பிவையுங்கள்

★ ஏ. பி. வி. கோமஸ்

# சின்ன மனம் சிரிக்கிறது

இந்த வருஷமும் சின்னயேசு பிறக்கப் போகிறார் என்று எங்க அம்மா என்னிடம் சொன்னார்கள். ஆமாம் கிறிஸ்மஸ் வருகிற தாம். எனக்கு நல்ல சந்தோஷம் தான்...ஏன்...?

புது சேர்ட், களுசம், சப்பாத்து, மேஸ் எல்லாம் அப்பா வாங்கித் தருவார்களே. எல்லாத்தையும் மாட்டிக்கிட்டுச் சும்மா ஜாம் ஜாம்னு நான் கோயிலுக்குப் போவேன். அதுவும் ராத்திரி நடுச்சாமம்போவம்

நான் பொய் சொல்றது இல்லே. என்னைய போலதான் சின்ன யேசு என்னு அம்மா சொல்லுவாங்க. பாருங்க சின்ன யேசுட அம்மா பேர் மேரி. என்னுடைய அம்மா பெயரும் மேரி தான். நல்ல பொருத்தமில்லியா

ஆமா— சொல்ல வந்த விஷயத்த மறந்துட்டேனே.

எங்க வீட்டில் வருஷா வருஷம் 'பாலன்குடில்' வைப்பாங்க அப்பாதான் வைப்பாங்க, செய்வாங்க. நல்ல அழகா, வடிவா ஒரு குடில்மாதிரிச் செய்து,அதில சின்னச் சின்னச் சுருபங்கள வைப்பாங்க. பாலன் யேசு பிறந்திருக்கிற மாதிரி இருக்கும். பக்கத்தில அவருடைய அம்மாமேரி முழங்கால்ல இருக்கிறமாதிரி இருக்கும். யேசுவுடைய அப்பா சூசையப்பர் நின்றுகிட்டிருப்பா ஆடு, மாடு, கழுத எல்லாம்நிற்கும். ஆடு மாடுகள் மேய்க்கிறவர்களும் நிற்பாங்க. நெசப்புல்லும் வச்சிருக்கும்.

மேலே ஒரு வாள் நட்சத்திரம் இருக்கும். அதற்கு நல்ல அழகா லைட் போட்டிருக்கும். யில் போடப்பட்டிருக்கும்.வைக்

பூசைக்குப் போய் வந்தபிறகு பட்டாசு வெடிப்போம். கிறிஸ்மஸ் கேக் வெட்டிச் சாப்பிடுவோம். சர்பத் குடிப்போம்,பின்னல் விருந்து சாப்பிடுவோம்.. ஆமாம் நெறையப் பேர் வீட்டுக்கு வருவாங்க......ஆமாம்.

ஓ ஓ...நான் யாருன்னு உங்களுக்குச் சொல்ல இல்லியா? என் பெயர் மெரினே. எனக்கு வயசு ஐந்து. நான் இப்போதான் 'பாலர்' வகுப்புல படிச்சிக்கிட்டிருக்கிறன்

கோலுக்கு மேல இருக்கும். வெள்ளித் தாளால் செய்ததால் நன்ருக ஜொலிக்கும்.

ஆமாம் அப்பா ஒரு பாட்டு சொல்லுவார். நாட்டுப்பாடல் என்னு சொல்லுவார்

''பாலன் பிறந்தார்.
பக்கிஸ் பெட்டியைத் திறந்தார்
அவர் கொஞ்சம் எடுத்தார்
எனக்குக் கொஞ்சம் தந்தார்

அப்பா தான் சொன்னுர். எனக்கு என்ன விளையாட்டுச் சாமான் தேவையின்னு. ஒரு பேப்பர்ல எழுதி வச்சிட்டுப், பக்கத்துல ஒரு பெரிய மேஸ் தொங்கப் போட்டா, கிறிஸ்மஸ் பப்பா அந்த சாமான, ராத்திரி கொண்டு வந்து மேசுக்குள்ள போடுவாராம்.

நான் போன வருஷம் இப்படியே செய்தன். எனக்கு ஒரு சின்ன கார் கிடைச்சுது. சரி—

இந்த முறையும் நான் அப்படியே செய்யப் போறேன். ஆமாம் என்ன கேட்கலாம்..? இப்போ எல்லாரும் ஹொண்டாவிலதான் போறுங்க. சரி, ஹொண்டா கேட்கலாம். ஆனல்— எப்படி கிறிஸ்மஸ் பப்பா அத தூக்கிக்கிட்டு வரமுடியும். ரொம்பப் பாரம்தானே? அதனுல—

சின்ன சைக்கிள் ஒன்று கேட்கப் போறேன்.



ஓ.....நான் அதுக்குத் தேவையானது எல்லாம் செய்யனும்.. அதனுல...வர்ரன்.....

நீங்களும் அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சிமார்களே— பாலன் யேசு வழியாக—கிறிஸ்

நீ மக்களிடம் என்ன சொல்கின்ருயோ அதைச் செயற்படுத்திக்காட்டு. இல்லையேல் நீ என்ன செய்கின்ருயோ அதை மக்களுக்குச் சொல்.

— மகாத்மா காந்தி

மஸ் பாப்பாகிட்ட எதையாவது கேளுங்க....தருவார். கட்டாயம் தருவார்— ஆளு அதுக்கு—

எல்லாரும் பாவஞ் செய்யாம நல்லவங்களா இருக்கணும். நான் வருகிறேன். வணக்கம்.

★ ★ ★

என் மகளின் கற்பனை உலகம் இது. ஆமாம் சின்ன மனம் ஒன்று சிரிப்பதை உணர்கிறேன்.

''சிறு பிள்ளைகளை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் மோட்சராச்சியம் அப்பேர்ப்பட்டவர்களுடையது'' என்று யேசுக்கிறீஸ்து சொன்னதாக விவிலியத்தில் வாசிக்கிருேம்.

உண்மையிலும் உண்மைதான் ஏனெனில்—வெள்ளைமனம் அவர்களுடையதுதானே!

## உங்கள் கவனத்துக்கு



# தேசீயதினங்களின் பட்டியல்
## List of National Days

| | | |
|---|---|---|
| 03 | கார்த்திகை | பனமா / Republic of Panama |
| 07 | ,, | சோவியத்ருஷ்யா / Union of Soviet Socialist Republic (U.S.S.R.) |
| 12 | ,, | ஸ்வீடின் / Sweeden |
| 15 | ,, | பெல்ஜியம் / Belgium |
| 29 | ,, | யூகொஸ்லேவியா / Socialist Federal Republic of Yugoslovia |
| 29 | ,, | லெபனன் / Lebanese |
| 01 | மார்கழி | வுறுண்டி / Burundi |
| 02 | ,, | ஐக்கிய அரபு எமிறி அரசு/United Arab Emipates |
| 05 | ,, | தாய்லாந்து / Thailand |
| 06 | ,, | பின்லாந்து / Republic of Finland |
| 12 | ,, | கென்யா / Republic of Kenya |

# உங்களுக்குத் தெரியுமா?

★ டிசம்பர் 25ஆம் திகதியை கிறிஸ்து பிறந்த தினமாக, கிறிஸ்மஸ் தினமாக மக்கள் கொண்டாடுகின்றனர். டிசம்பர் 25 ஆம் திகதியை இதற்காகத் தெரிந்து கொண்டதன் காரணம் என்ன?

உண்மையில் கிறிஸ்து இயேசு பிறந்த தினம் எதுவென எவரும் சரியாக அறிந்திலர் கிறிஸ்துவுக்குப் பின் 354ஆம் ஆண்டு ரோமின் பிஷப் லைபீரியஸ் என்பவர் டிசம்பர் திங்கள் 25ஆம் நாளை கிறிஸ்மஸ் தினமாகக் கொண்டாடும்படி பிரகடனம் செய்தார். இந்த டிசம்பர் 25, ஏற்கனவே ரோம் மக்கள் மத்தியில் சாட்டர்னின் பண்டிகையாக வழங்கப்பட்டுவந்தது. இரண்டையும் ஒரு நாளில் வைத்துக் கொள்வதற்காக டிசம்பர் 25ஐ கிறிஸ்மஸ் தினமாக தெரிவு செய்யப்பட்டது.

★ வாகனங்களில் பயணம் செய்யும்போது, புத்தகங்களை வாசிப்பது தவிர்க்கப்பட வேண்டிய வழக்கம் ஆகும்.

ஏனெனில், நாம் கண்ணுக்கு முன்னால் ஒரு இடத்தில் புத்தகத்தை வைத்து வாசிக்கும்போது கண் அதற்கேற்ற விதமாக தன்னைச் சரிசெய்து கொள்கிறது. கண்ணிலிருந்து வெவ்வேறு தூரங்களில் உள்ள எழுத்துக்களை மூளை உணர கண் வெவ்வேறு விதமாகத் தன்னைச் சரிசெய்ய வேண்டியுள்ளது. வாகனங்களில் இருக்கும்போது (அசைவு கூடுதலாக உள்ளதால்) நாம் அங்குமிங்குமாக அசைக்கப்படுவதால் எமது கண்ணுக்கும் வாசிக்கும் எழுத்துக்குமிடையிலுள்ள தூரம் அடிக்கடி வேகமாக மாறியவண்ணம் இருக்கும். எனவே மேற்கண்ட கண்ணும் எழுத்துக்கள் இருக்கும் தூரத்துக் கேற்பத் தன்னை இசைவுபடுத்திக் கொண்டிருக்கும் இதன் விளைவாக கண் சோர்வடையும்—பாதிக்கப்படும்.

★ குறிப்பிட்ட சில காலங்களில் வண்ணத்துப் பூச்சிகள் கூட்டங் கூட்டமாக ஒரு திசையை நோக்கிப் பறப்பதை அவதானிக்கப்பட்டது. இதற்குக் காரணம் என்ன ?

வண்ணத்துப் பூச்சிகள் கூட்டங்கூட்டமாக தேன்பருகவென மலர்கள் காணப்படும் இடம் நோக்கி பறக்கும். அக்காலங்களில் பலமான காற்று வீசுவதால் வண்ணப் பூச்சிகளால் தாம் விரும்பிய திசையில் பறக்க முடிவதில்லை. அவற்றின் வலிமையின்மையே அதன் காரணம். எனவே எல்லா வண்ணத்துப் பூச்சிகளும் ஒரு திசையில்பறக்க நேரிடுகின்றது. உண்மையில் அவை காற்றால் அடித்துச் செல்லப்படுகின்றது எனலாம். இவை இவ்வாறு பறந்து செல்வதன் காரணம் இதுவே ஆகும்.

★ சின்னம்மை நோயுடையோர் வீட்டில் இருப்பராயின் சமயலின்போது 'தாழித்தல்' என்ற சமையல் பாகத்தைச் செய்தல் ஆகாது எனப்படும். காரணம் என்ன ?

ஏனெனில் தாழித்தலின்போது ஒருவித நெடி ஏற்படும். இது எமக்கு இருமலை ஏற்படுத்துவது இயல்பு. நிற்க, சின்னம்மை நோயுடைவருக்கவரதுசாப்பாட்டுத் தொகுதியிலும் கொப்புளம் ஏப்பட்டிருக்கலாம். அவர்கள் இருமினால் நமைச்சல் / Irriation ஏற்பட்டு அவதியுற வேண்டிவரும் இதனை தவிர்க்குமுகமாகவே தாழித்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

— ஆர். எஸ் செல்வரட்ணம் —



# ஒளி பிறக்குமா?

ஒளி பிறந்து இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளாகின்றன இந்நிலையில் ஒளி பிறக்குமா? என்ற கேள்வி எழத்தான் வேண்டுமா? ஆம் பாவிகளை இரட்சிக்க யேசு என்னும் ஒளி பிறந்தது உண்மையே. பாவிகள் இரட்சிக்கப்பட்டார்கள். இரட்சிக்கப்படுகிறார்கள். ஆனால் பாவிகள் என்றும் குறைந்தார்களா? ஒளிபிறந்தது என்றால் அந்த ஒளியில் ஓர் புதிய உலகம் மலர்ந்ததா? இது பற்றிச் சிந்திக்க நாளைய புதிய உலகமாக மாறப்போகும் இன்றைய இளைஞர்களைப்பற்றிச் சிறிது சிந்தித்துத்தான் பார்ப்போமே.

எதிலும் புதுமை, புரட்சி,சீர்திருத்தம், உரிமைப்போராட்டம், சீதன ஒழிப்பு என்றெல்லாம் பலவிதமாகக் கோசமெழுப்பிவரும் இளைஞர்களை உற்று நோக்குவோம். இன்றைய இளைஞர்களில் இவ்வாறு கோசமெழுப்புபவர்களை ஒருபடி மேலே உயர்த்தி வைத்து விட்டு எதுவுமே பேசாது வாய்மூடிக் கோழைகளாக வாழும் இளைஞர்கள்பற்றி நினைத்துப் பார்ப்போம்

மற்றவர்கள் ஏதோ செய்கிறார்கள், அவர்களே புரட்சிசெய்வார்கள், அவர்களே சாதனை நிலைநாட்டுவார்கள், அவர்களே உரிமைப்போராட்டம் செய்வார்கள் என்று இவ்வாறெல்லாம் மற்றவர்கள் புகழ்பாடி மற்றவர்களது முயற்சியில் எந்தவித பங்கெடுக்கவும் துணிவில்லாது ஒதுங்கிவாழும் இளைஞர்களை எப்படித்தான் கூறுவது. அது மட்டுமா?

இவர்கள் மத்தியில் இன்னொரு விதமானவரும் உள்ளார்கள். அதாவது | ''வைக்கோற்

பட்டடை நாய் போன்றவர்கள்'' தாங்களும் செய்ய மாட்டார்கள், மற்றவர்களையும் செய்ய விடமாட்டார்கள். மற்றவர்கள் செய்யும் நன்முயற்சிகளைத் தட்டிக்கொடுக்க வேண்டியவர்கள் அதைவிடுத்து மற்றவர்கள் முயற்சியில் பிழைகண்டு உரைப்போரை என்னதான் செய்வது? இப்பேற்பட்ட இளைஞர்கள் மத்தியில் ஒளி பிறக்குமா? நாளைய புதிய உலகம் மலருமா?

இனி முன்பு ஓர் படி முன்னே வைத்த இளைஞர்களைக் கண்ணோக்குவோம். இவர்களிலும் பல திறத்தவர்கள் உள்ளார்கள். சொன்னதையே செய்வார்கள் சிலர், சொல்வது ஒன்று, செய்வது வேறொன்றாக இருப்பார்கள் வேறுசிலர், சொல்வதுடன் மட்டும் நின்றுவிடுவார்கள் இன்னும் சிலர். இவர்களில் சொன்னதையே செய்வோரை நான் பாராட்டுகிறேன். அவர்களிடையே ஒளி பிறந்துவிட்டது. புதிய உலகம் மலரட்டும் வாழ்த்துகிறேன்.

சொல்வது ஒன்று செய்வது வேறொன்றாக உள்ளவர்களும், சொல்வதுடன் மட்டும் நின்றுவிடுபவர்களும் ஒன்றே. இவர்கள் எதுவுமே பேசாதிருந்தால் நான் முதலில் கூறிய வகையினரைச் சார்ந்து குற்றமற்றவர்களாகியிருப்பார்கள். ஆனால் இவர்கள் புரட்சி, புதுமை, சாதி ஒழிப்பு, சீதன ஒழிப்பு என்று பல்வேறு புரட்சிகரமான, கேட்பதற்கு இனிமையான கோசங்களை எழுப்பி அத்துடன்மட்டும் நின்றுவிடுகிறார்கள். ஆனால் செய்யத் துணிவில்லை. இங்கு உதாரணத்துக்கு இன்று முக்கிய கோசமாக இருக்கும் சீதன ஒழிப்பை எடுத்தால் சீதன ஒழிப்பு என்று கோசமிடுவோரில் எத்தனைபேர் சீதனமில்லாது, துணிந்து ஏழைப் பெண்களுக்கு வாழ்வளிக்க முன்வருவார்கள். இவர்கள் கூறும் போலிச்சாட்டு '' ''நாங்கள் கேட்கமாட்டோம்.

> செல்வத்திலும் பதவியிலும் உங்களைவிட உயர்ந்தவர்களை நினைத்துப்பார்க்கும் அதே வேளையில் உங்களை விடத் தாழ்ந்தோரையும் நினைத்துப் பார்க்கத் தவறாதீர்கள்.
>
> — **நபிகள் நாயகம் (ஸல்)**

அவர்கள் தருவதை ஏற்றுக் கொள்வோம்'' இன்று சீதனச் சந்தையில் கேட்காமலே சீதனம் உயரும் நிலையிருக்கும்போது இவர்கள் பதிலின் அர்த்தம்தான் என்னவோ?

இங்கு நான் இளைஞர் என்று கூறும்போது பொதுவாக யுவதி

களையும் கருதியதால் மேற்கூறிய உதாரணத்தில் யுவதிகளையும் இணைத்துக்காட்ட விரும்புகிறேன். இன்று சீதனத்துக்கெதிராகப் போர்க்கொடி எழுப்பும் யுவதிகளில் எத்தனைபேர் சாதாரண ஏழைத்தொழிலாளியையோ, விவசாயியையோ விரும்புகிறார்கள். அவர்களும் பணக்காரர்களையும், உத்தியோகத்தர்களையும், ஆடம்பரவாழ்க்கையினரையும் விரும்பி அவர்களுக்குமட்டும் தேர்ந்து கேள்வி எழுப்பும்போது சீதனம் உயராமலா போகும்?

இவ்வாறே கோசமெழுப்பும் ஒவ்வொன்றையும் அதேவேகத்துடன் செய்யத் துணிவற்றவர்கள் எத்தனைபேர்? பேச்சில் அழகாகக் கூறுவர், செயலில் கெட்டித்தனமாக மறைந்து விடுவர். இவர்கள் மத்தியில் ஒளி பிறக்குமா? அதன் வழி புதிய உலகம் தான் மலருமா?

★ க. பேறை
கொழும்பு பல்கலைக் கழகம்.

சொன்னதைச் செய்யத்துணிவற்றுப் போவதற்குக் காரணமாக இருக்கிறார்களே வேறுசிலர் அவர்களைப்பற்றியும் கூறத்தான் வேண்டுமா? ஆம் கோசமெழுப்பி ஆர்வத்துடன் முன்னேவரும் இளைஞர்களைப் பயம் காட்டித் தடுத்து வைப்போரும், உலக, சமுதாய, சமூக சம்பிரதாயங்களைச் சொல்லி அதன்வழி நாளைய விளைவுகளையும் சொல்லி தடுத்து வைப்போரும், செய்யத்துணியும் இளைஞர்களுக்கு எதிராகப் பொய்ப்பிரசாரம் செய்வோரும் இன்னும் இவ்வாறு தடைக்கல்லாய் அமைவோரும் உலகில் இல்லாமல் இல்லை. இவர்கள்மத்தியில் ஒளி பிறக்குமா? அதன் வழி புதிய உலகம்தான் மலருமா

> யோசியாமல் பேசியதற்கு வருந்துவதைவிட, பேசுவதற்கு முன்னால் யோசனைபண்ணுவது உசிதம்·
>
> — ஒருவர்.

இவ்வாறு உலகில் பல பிரச்சனைகளுக்கு மத்தியில் வாழும் நம் இளைஞர் துணிவுடன்சொல்ல வேண்டும், சொல்வதைத் துணிவுடன் செய்ய வேண்டும். அதற்கு நல்லதொரு ஒளி வேண்டும். அந்த ஒளி இந்த உலகில் இந்த நாளில் பிறக்குமா? தங்கள்வாழ்வில் ஒளி பிறக்குமா? என ஏங்கித் தவிப்போர் எத்தனைபேர். அவர்கள் வாழ்வில் எவ்வாம் ஒளி பிறக்குமா? அதன் வழிபுதிய உலகம் மலருமா?

இரண்டாயிரம் ஆண்டுகளாக கொண்டாடிவரும் ஒளியாம் இறைவன் பிறந்த நாள் இதோ எதிரே வந்துகொண்டிருக்கிறது. அந்த ஒளி நாளைத் தாண்டும் போது நம் இளைஞர் மத்தியில் நல் ஒளி பிறக்குமா? ஆம் ஒளி பிறக்க வேண்டும். புதிய உலகம் மலரவேண்டும்.

*நூல் ஆய்வு*

# திருக்குறளும் விவிலியமும்

★ நூலாசிரியர். சுவாமி பாவிலுப்பிள்ளை B. A., L. Ph., B. D. அவர்கள்

திருமறைக் குரவராகிய கலாநிதி பாவிலுப்பிள்ளை அடிகளார் திருக்குறளும் விவிலியமும் எனும் நூலை ஆக்கி வெளியிட்டுள்ளார். இந்நூல் சீரிய, புதுமுறைச்சீரிய தனிச்சிறப்புடைத்து. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் மறை நூலான திருக்குறளின் கருத்துகளை, உலகிற் சிறந்த மறை நூலாகக் கருதப்படும் விவிலிய (வேதாகம) நூலின் பொருள்களோடு ஒற்றுமைப்படுத்திக் காட்டுவதே இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

விவிலியத்திலும், திருக்குறளிலும் கூறப்பட்டிருக்கும் சில கருத்துக்களைப் புதுக்கண்ணோட்டத்தில் காணுமாறு அழைப்பதாக இந்நூல் அமைந்துள்ளது.

இந்நூல் தமிழ் உரை நடை இலக்கியத்துக்கு ஒரு புதுமுறைப் படைப்பாகும்.

இஃது ஓர் ஆய்வு நூலாகும். இந்நூலின் சிறந்த அமைப்பும், எளிய நடையும், இனிய சுவையும், செறிந்த கருத்தும், படிப்போர் அனைவருக்கும் அரியதொரு விருந்தாகும்.

மறைநூலாம் விவிலியக்கருத்துக்களுக்கும், திருக்குறளின் கருத்துக்களுக்கும் தொடர்பு உண்டு என்பது பொதுப்படையாகப் படிப்போருக்கு விளங்கும். சுவாமிகள் இதனைத் துணிந்து, ஆய்ந்து விவிலியக் கருத்துகள் தமிழுக்கு ஏற்றனவேயென்று சுட்டிக்காட்டி எண்பித்திருக்கிறார்.

இந்நூலின் பெயருக்கு முதலிலேயே சுவாமிகள் மிக அழகான விளக்கவுரையும் தந்துள்ளார். ''தமிழ் வேதமாகிய திருக்குறளின் தத்துவக் கருத்துரையும் பொது வேதமாகிய விவிலியத்தின் பொருள் ஒப்புவமையும் என்பதே அது. இப்பெரும் நூலின் முதலாம் பகுதியாகத் தற்போதைய பதிப்பு வெளியிடப்பட்டிருக்கின்றது.

மொழிகள் பலவும் கற்றறிந்த சுவாமிகள் கடவுள் என்ற

★ பண்டிதர் ஆசிநாதர்.

சொல்லைப்போலும் பொருள் வளம் நிறைந்த சொல் தமிழ் தவிர்ந்த வேறெந்த மொழியிலும் காண்பதற்கில்லை' என்று குறிப்பிடுவது தமிழின் மேம்பாட்டுக்கு உறுதிதருவதாயுள்ளது.

இறைவனை வைத்தே இலக்கியம் படைத்தான் தமிழன். தமிழ் அறிஞராகிய சுவாமிகள் இறைவன் அருளிய திருமறையை முன்வைத்தே இந்த அரிய ஆராய்ச்சி நூலை வெளியிட்டுள்ளார்.

சுவாமிகளின் பணி போற்றுதற்குரியது. சுவாமிகளின் தமிழ்ப்பணி முயற்சி தமிழுலகுக்கு மாபெரும் வளர்ச்சியாகும். குறள் கூறும் பொருளோடு இறைவாக்கை இணைத்திட்ட அன்னாரின் சிறப்பே சிறப்பு. சுவாமிகளின் ஆற்றலும், ஆர்வமும் தொண்டும் மேலும் மேலும் வளர்வனவாக!

செய்யாமற் செய்த உதவிக்கு
வையகமும் வானகமும்
ஆற்றலரிது (101)

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.
(50)

---

ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால்தான்
தீமை அதிகம். —ஆர்மினியாபழமொழி




— நாவண்ணன் —

(கந்தை அணிந்த நால்வர் "அம்மா பசிக்குதே தாயே பசிக்குதே" என்று பாடிக்கொண்டு மேடையை மூன்று தரம் சுற்றி வருகின்றனர். பின்னர் மேடையின் நடுவில் நின்று கொண்டு ஒவ்வொருவராக முன்னுக்கு வந்து)

கந்தை 1— எனக்குப் பசி காதை அடைக்குது.

கந்தை 2— எனக்குக் கண்ணை இருட்டுது.

கந்தை 3— எனக்குத் தலையைச் சுத்துது

கந்தை 4— என்னால நடக்கவே முடியல்ல..

(ஒரே இடத்தில் நின்றுகொண்டு)

கந். 1 — சந்திரமண்டலத்துச் சாப்பாடும் கிடைக்கல்ல

கந். 2 — இரண்டு கொத்தும் போச்சு

கந். 3 — அரிசியும் ஆனைவிலை.

கந். 4 — நாங்கள் எதைத்தான் சாப்பிடுறது.

கந்தைகள் — நாங்கள் எதைத்தான் சாப்பிடுறது? நாங்கள் எதைத்தான் சாப்பிடுறது? நாங்கள் எதைத்தான் சாப்பிடுறது.

(மேடையின் மறைவில் பச்சைச்சால் வையின் குரல் கேட்கிறது)

குரல் — எட்டுருத்தல் தருகிறேன்.

(கந்தைகள் அங்கும் இங்கும் பரக்கப் பரக்கப் பார்க்கின்றனர்)

குரல் — எட்டுருத்தல் தருகிறேன்

கந். 1 — எட்டுருத்தல்! (ஆச்சரியத்துடன்)

கந். 2 — எட்டுருத்தல்!

கந். 3 — எட்டுருத்தல்!

கந். 4 — எட்டுருத்தல்!

கந். 1 — எட்டுருத்தல் என்ன?

கந்தைகள் — (ஒரே குரலில்) எட்டுருத்தல் என்ன?

குரல் — தானியம்.

கந்தைகள் — தானியமா?

குரல் — ஆம் சாப்பாடு....

கந். 1 — எட்டுருத்தல் சாப்பாடு!

கந். 2 — எட்டுருத்தல் சாப்பாடு!

கந். 3 — எட்டுருத்தல் சாப்பாடு!

கந். 4 — எட்டுருத்தல் சாப்பாடு!

கந். 1 — ஆ....சாப்பாடு கிடைக்கப் போகுது.

**("சாப்பாடு கிடைக்கப் போகுது" என்று கூறி சந்தோஷத்துடன் கைகளைத் தட்டிய வண்ணம் துள்ளித் துள்ளி ஆடுகின்றனர். இந்தவேளை பச்சைச் சால்வை போட்ட மெலிந்த, உயர்ந்த உருவம் மேடைக்கு வந்து இவர்களுக்கு நடுவில் நிற்கிறது.)**

பச்சை — சாப்பாடு வேணுமா?

கந்தைகள் — வேணும்.

பச்சை — எல்லாரும் எனக்குப்பின்னுல ஒண்ணு வாங்க.....

கந்தைகள் — வாறேம்...சாப்பாடு...சாப்பாடு

**(பச்சை முன்னே நடக்க, கந்தைகள் "சாப்பாடு" கோஷமிட்ட வண்ணம் தொடர்கின்றனர். மேடையை இரண்டு தரம் சுற்றி வந்தபின்னர், பழையபடி பச்சை நடுவிலும் பச்சையின் இரண்டு பக்கமும் இருவர் இருவராக நிற்கின்றனர்.)**

பச்சை — என்னை நம்பினுல் சரி. பயப்பிடாதீங்க. உங்களுக்கு எல்லாம் தருவேன்...நம்புறீங்களா?......

கந்தைகள் — நம்புறேம்... அம்மா பசிக்குதே.. தாயே பசிக்குதே....

பச்சை — உஸ்.....யாரும் இனிமேல் அம்மாபசிக்குதேன்னு சொல்லப்படாது. இனிமேல் உங்களுக்குப் பசிக்காது.

கந்தைகள் — இப்ப பசிக்குதே....

பச்சை — அப்போ ஐயா பசிக்குதேன்னு சொல்லுங்க.....

கந்தைகள் — ஐயா பசிக்குதே...ஐயா பசிக்குதே....

பச்சை — உங்கட்ட இருக்கிற சாப்பாட்டையெல்லாம் கைவிடுங்க.

கந்தைகள் — ஏன்?

பச்சை — அதில சத்துக் குறைவு......

கந். 1 — நாங்க செய்யிற பனங்கட்டி நல்ல ருசி.

பச்சை — (கோபத்துடன்) சீ...ஆர் சொன்னது?

கந்' 2 — அம்மா சொன்னவ.

பச்சை — அம்மா சொல்லைக் கேட்டுத்தான் இந்த நிலைமை....

கந். 3 — நாங்களும் திண்டு பாத்தனுங்கள்

பச்சை — அதுதானே நான் சொன்னன் உங்களுக் கொண்டுமே தெரியாதெண்டு. நீங்கள் என்ர பிள்ளைகள். அம்மா உங்களைப்பழு

— தாக்கிற்று.. நீங்கள் சத்துள்ள வெளிநாட்டுச் சாப்பாடுகளைத்தான் சாப்பிடவேணும் விளங்குதா?

கந். 4 — ஓம்.....விளங்குது.

பச்சை — எல்லாருக்கும் நல்லாய் விளங்குதா?

கந்தைகள் — ஓம்.....நல்லாய் விளங்குது....

பச்சை — (மேடையில் முன் வலதுபக்கம் குனிந்து எடுத்து) இந்தா வெளிநாட்டு போளை.. (மேடையின்முன் இடதுபக்கம் வந்து) இது வெளிநாட்டுச் சேலை...(மேடையின் நடுவில் வந்து மோட்டார்சைக்கிளில் இருப்பதுபோல் அபிநயித்து) இதுவெளிநாட்டு மோட்டார் சைக்கில்...எல்லாம் உங்களுக்காகத்தான்....

கந்தைகள் — (உரத்தகுரலில்) எங்களுக்குச் சாப்பாடு சாப்பாடு வேணும்.....ஐயா பசிக்குதே.

பச்சை — சாப்பாடுதானே வேணும்... எல்லாரும் மேல அண்ணாந்து பாருங்க....அது எல்லாம் உங்களுக்காகத்தான்... (மேலே காட்டி) வெளிநாட்டு அப்பிள், வெளிநாட்டு பிஸ்கட், வெளிநாட்டு மாவு' வெளிநாட்டுச்சீனி.. எடுத்துச்சாப்பிடுங்க. (கந்தைகள் கைகளை உயர்த்தி எட்டிப்பிடிக்க முயலுகின்றன)

கந். 1 — எங்களுக்கு அது எட்டவில்லையே..

பச்சை — சும்மா நின்றால் கிடைக்காது... எடுக்கத் தெண்டிக்க வேணும்...
(கந்தைகள் தொங்கிப்பாய்ந்து எட்டிப் பிடிக்க முயலுகின்றன. ஒருவர்மீது ஒருவர் ஏறி நின்று எடுக்க முயலுகின்றனர். பின்னர் சோர்வுடன்)

கந். 2 — ஐயோ எங்களால் பிடிக்கமுடியல்லையே..

கந். 3 — எட்டாத உயரத்தில் இருக்குதே..

பச்சை — உயர்ந்த சாப்பாடுகள் உயரத்தில்தான் இருக்கும்.

கந். 4 — சந்திரமண்டலச் சாப்பாட்டைவிட உயரமாக இருக்கே.....

பச்சை — சந்திரமண்டலத்துச் சாப்பாடு கற்பனை. நாங்கள் தாறது நெசம்.

கந்தைகள் — உண்மை எல்லாம் உயரத்திலதான்இருக்குமா?

பச்சை — அப்படித்தான்.

(இந்தவேளை மேடையின் இரண்டு பக்கத்திலும் இருந்து சிகப்புச் சட்டை அணிந்த இருவர் வந்து முன்பக்க மேடையின் இரண்டு பக்கங்களிலும் நிற்கின்றனர்)

சிகப்பு 1 — அமெரிக்கச் சாப்பாடு எல்லாம் உயரத்திலதான் இருக்கும்.

சிகப்பு 2 — அது நம்ம மக்களுக்குச் சரிவராது. எங்கள் மக்கள் முன்னேற ரஷ்யச்சாப்பாடுதான் வேணும்.

சிகப்பு 1 — இல்லே சீனச் சாப்பாடுதான் நல்லம்.

சிகப்பு 2 — சேச்சே...அதில பாம்பும் தவளையும்தான் இருக்கும். நமக்கு அது சரிவராது. ரஷ்யச் சாப்பாடுதான் நல்லம்.

சிகப்பு 1 — ரஷ்யா இரும்புத்திரையில அடிமைச்சாப்பாடு. இந்தச் சுதந்திரக் குடியரசு மக்களுக்கு இது சரிவராது.

சிகப்பு 2 — ரஷ்யா மாதிரிச் சாப்பிட்டு முன்னேறுவோம்.

சிகப்பு 1 — இல்லே சீனு மாதிரிச் சாப்பிட்டு முன்னேறுவோம்.

சிகப்பு 2 — ரஷ்யாதான் நமக்கு வேணும்.

சிகப்பு 1 — இல்லே சீனுதான் நமக்கு வேணும்.

சிகப்பு 2 — ரஷ்யாதான்..

சிகப்பு 1 — சீனுதான்..

சிகப்பு 2 — ரஷ்யா வாழ்க..

சிகப்பு 1 — சீனு வாழ்க..

(இந்த உரையாடல் நடக்கும்போது, பச்சையும், கந்தைகளும் மாறி மாறி இருவரையும் பார்க்கின்றனர்.)

பச்சை — மூச்.....(அதட்டலுடன்) யாரும் சத்தம் போடக்கூடாது. இது சுதந்திரக் குடியரசு.... (முன்னேவந்து) எங்களுக்கு எங்கட பலாக்காயும் மரவெள்ளிக்கிழங்கும் போதும். அது எங்கள் தேசிய உணவு. அதுவரையில் எங்களுக்கு அமெரிக்கச் சாப்பாடு போதும்.... (சிகப்புகள்போகின்றன)

கந். 1 — அதுதான் எட்டாத உயரத்தில இருக்குதே..

பச்சை — சும்மாய் இருந்தால் கிடைக்குமா?

கந். 2 — அதுக்கு நாங்க என்ன செய்யிறது?

பச்சை — அதுக்கு உழைக்க வேணும்.

கந். 3 — உழைப்பும் இல்லேயே..

பச்சை — அம்மா உங்களை வளர்க்கத் தெரியாமல் வளர்த்துக் கெடுத்திட்டா. நீங்கள் சும்மாய் இருந்து சாப்பிட்டுச் சோம்பேறிக

ளாகிட்டியள்.. இனி உங்களுக்கு நான் சும்மா சாப்பாடு தரமாட்டன்.

கந்தைகள் — ஆ............!

பச்சை — தாற சாப்பாடெல்லாம் உயர்ந்த சாப் பாடுதான் தருவன். நீங்கள் எங்கையும் வாங்கலாம். கேக் தின்னலாம். அப்பிள் தின்னலாம், அம்மா உங்களுக்கு இதெல் லாம் வாங்கித்தரஇல்லே. நான் வாங்கித் தாரன்.

கந்தைகள் — அம்மா பசிக்குதே....

பச்சை — (கோபத்துடன்) அப்படியாரும் சொல்ல கூடாது.

கந்தை — ஐயா பசிக்குதே...

பச்சை — ஏன் பசிக்கணும். மேல இருக்கிற சாப்பா டெல்லாம் உங்களுக்குத்தான். எடுத்துச் சாப்பிடுங்க...

கந். 1 — எங்களுக்கு எட்டாது..

பச்சை — ஏன் எட்டாது. கஸ்டப்பட்டு உழைச்சுக் காசை எறிஞ்சால் உயரம் எல்லாம் இற ங்கிவரும்.

கந். 2 — உழைப்புத்தான் இல்லேயே..

பச்சை — உழைப்பு நான் தாரன். (மேடையின் முன் வலப்பக்கம் வந்து காட்டி) இது நீங்க வியாபாரம் செய்யலாம். சுதந்திர மாக வர்த்தகம் செய்யலாம். வெப்பவல யம் குளிர்வலயம் எல்லாச்சாப்பாடும் இங்க கிடைக்கும். கொஞ்சப்பேர் அங்க போங்க...(இடப்பக்கம் முன் மேடைக்கு வந்துகாட்டி) இது வெள்ளாமைசெய்ய ஆற்றுத்திட்டம்...மகாவலிமையான திட் டம். இதில உழைச்சுச் சாப்பிடலாம். (பின் வலப்பக்கம் வந்துகாட்டி) இஞ்ச உங்கட பிள்ளைகள் படிச்சு டொக்ரர், இஞ்சினியர் ஆகலாம்..(பின் இடப்பக்கம் வந்துகாட்டி) இந்தா வீடுகள் திட்டம்.

(இந்த வேளை 'குடுக்காதே'' என்றுநாலு குரல்கள் ஒன்றன்பின் ஒன்முக ஒலிக்கின் றன. அதைத்தொடர்ந்து 'பட்டிக்' சார மும் பெனியனும் போட்ட நால்வர்'குடு க்காத' என்ற கோஷம் எழுப்பிக்கொண்டு இவர்களேயும், மேடையையும் சுற்றிவந்து மேடையின் வலதுபக்கத்தில் நிற்கின்ற னர். பச்சை நடுவில் நிற்கிறது. கந்தை கள் இடது பக்கத்தில் நிற்கின்றன. கந் தைகள் வியப்புடனும், பயத்துடனும் சாரம் அணிந்தவர்களேப் பார்க்கின்றன)

(தொடரும்)

# வாழ்வில் ஒளியூட்டும்

# வாழ்வோதயம்



அல்லல் படுவோர், அந்தரித்தோர், ஒதுக்கப்பட்டோர், ஏழைகள், அநாதைகள் வாழ்விலே ஒளி உதயமாகவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சேவை இயக்கமான மனித முன்னேற்ற நடு நிலையத்தின் 'வாழ்வோதய' இயக்கம் இதன் வடமாகாண இயக்குநர் அருட்திரு ஜே. பி. தேவராஜா அடிகளைப பேட்டிகண்டு ''புதிய உலகம்'' ஒளிமலரில் வெளியிடுவதில் பெருமையடைகிறோம்,

**உங்கள் இயக்கம் எப்பொழுது ஆரம்பமானது? அதன் தலைமையகம் எங்குள்ளது?**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் புரட்சியில் மலர்ந்த இயக்கம்தான் இவ்வியக்கம். முழு மனித உருவாக்கலில் திருச்சபை தனது பங்கை முழுமையாகச் செலுத்த வேண்டும் என்பதற்காக உலகத்தின் ஆயர்கள் எல்லாம் தத்தமது நாடுகளில் இவ்வியக்கத்தை ஆரம்பித்தனர். அதன்பின்னர் ரோமாபுரியில் அண்மையில் 'கோர் உனம்' (COR UNUM) இதன் பொருள் 'ஒரே இதயம்' என்னும் பெயரில் தலைமையகத்தையமைத்துள்ளனர். இங்கு *1970-ம்* ஆண்டுதான் இவ்வியக்கம் ஆரம்பமானது.

**இவ்வியக்கத்தின் பணிக்கு வேண்டிய நிதி உதவியை எப்படிப் பெற்றுக் கொள்ளுகின்றீர்கள்?**

எல்லாக் கத்தோலிக்க நாடுகளும் இதற்காக நிதி உதவி செய்கின்றன. குறிப்பாகத் தவக்காலத்தில் சேகரிக்கப்படும் தவக்கால நிதியைத் திருச்சபை இப்பணிக்காகவே ஒதுக்கியுள்ளது. குறிப்பாக எமது வடமாகாணத்துக்குப் பெரும்பாலான கொடை வழங்கும் நாடுகள் மேற்கு ஜேர்மனியும், ஒல்

லாந்தும்தான். யாழ் மறை மாவட்டத்தில் சேர்க்கப்படும் தவக்கால நிதி எமக்கே வழங்கப்படுகிறது.

**ஒவ்வொரு மறைமாவட்டத்துக்கும் தனித்தனி இயக்குநர்கள் இருப்பதால் ஒரு மறைமாவட்டத்தின் பணியின் செலவுகளை கொழும்பில் உள்ள தலைமை நிலையத்தின் கட்டுப்பாட்டுடன் தான் செய்கின்றீர்களா?**

முழுமனித உருவாக்கலுக்கு நாம் செலவிடும் இந்த நிதிவிடயத்தில் யாரும் எமக்குக் கட்டுப்பாடு விதிப்பதில்லை. நாம் சுதந்திரமாகவே இயங்குகின்றோம். ஆனால் எமது ஒரு திட்டத்துக்கான செலவின் மதிப்பீடுகளைச் செய்வதற்குத் தகுதிவாய்ந்த நிபுணர்கள் நம்மிடையே இல்லாதபடியால் தலைமையகத்தின் துணையைநாடிச் செலவுகளின் மதிப்பீடுகளைச் செய்து கொள்கின்றோம்.

**1970 முதல் இதுவரை தங்கள் இயக்கம் செய்த சாதனைகள் என்று எதையும் குறிப்பாகச் சொல்லமுடியுமா?**

பல செய்துள்ளோம். புள்ளிவிபரங்களை எடுத்துக் காட்டிப் பறைசாற்றிப் பெருமையடித்துக்கொள்வதைவிட நாம் மறைக்க நினைத்தாலும் மறைக்க முடியாத மூன்று விடயங்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று 1975ல் ஏற்பட்ட வரட்சிக்காலத்தில் படித்த இளைஞர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் கடனுக வழங்கி அவர்களை ஆற்றங்கரைகளில் பயிர் செய்ய ஊக்கம் கொடுத்தமை. இரண்டு 1977-ம் ஆண்டு இன கலவரத்தில் வடக்குநோக்கி வந்த அகதிகளுக்குப் புனர்வாழ்வளிக்கும் திட்டம். அடுத்தது சென்ற மாதம் 25-ம் திகதி மன்னர் மாவட்டத்தில் உள்ள பெரிய குஞ்சுக் கிராமத்தில் புதிதாகக் கட்டப்பட்ட மாதாகிராமத் திட்டம்.

**அகதிகளுக்கு எந்த அளவுக்கு தங்கள் பணி கிடைத்திருக்கிறது என்று கூறமுடியுமா?**

77 ஆகஸ்ட் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு வடக்குக்கு வந்தவர்களில் 2200 குடும்பங்களுக்குப் புதியவாழ்வளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இவற்றுள் 700 குடும்பங்கள் முழுக்க முழுக்க எமது பொறுப்பில் உள்ளன. ஏனைய குடும்பங்கள் அரசாங்கத்தினதும், மற்றும் சேவை இயக்கங்களினதும் உதவிபெற்று எமதுபராமரிப்பில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றன. பல துறவிகள், பொது நிலையினர், இளைஞர்கள் இப்பணிக்காகத்

தம்மை அர்ப்பணித்து முழு நேரத் தொண்டர்களாக இயங்கி வருகின்றனர்.

**எத்தனை இடங்களில் இத்தகைய பணியைச் செய்து வருகின்றீர்கள்?**

கிளிநொச்சியில் ஆரோக்கியமாதாபுரம், வவுனியாவில் ஆசிகுளம், அடைக்கலபுரம், ராமையன்கல்லு, கோவில்மோட்டை, மன்னாரில் கீரிசுட்டான், பூமலர்ந்தான், செட்டிகுளத்தில் வீரமாணிக்கன்குளம், பெரியகட்டு, மோத்தான் குளம், அடப்பங்குளம், மணியர் குளம் ஆகிய பன்னிரெண்டு இடங்களில் எமது பணியை ஆற்றுகின்றோம். இவைபோக சிறிதளவில் செய்யும் வேறு சில முகாம்களும் உண்டு. இவற்றில் சில கிராமங்களை நாமே காடு வெட்டிப் புதிதாக உருவாக்கிப் பெயர் சூட்டியுள்ளோம்.

**மாதா கிராமத்தைப்பற்றி என்ன கூறுகின்றீர்கள்?**

பிரதமரின் கிராமோதயத் திட்டத்தின் கீழ் உருவான வீடமைப்புத் திட்டமிது. மக்களின் பங்களிப்புடன் அரசாங்கத்தின் பொருட்களைக் கொண்டு 51 வீடுகளை எமது வாழ்வோதய இயக்கம் கட்டிக் கொடுத்துள்ளது. மிகவும் பின்தங்கியஒரு கிராமம் ஒரு சிறு பட்டினம் போன்று சகல வசதிகளையும் கொண்ட ஒன்றாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. எமது இயக்கம் இந்த வீடமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளதையிட்டு அடுத்த ஆண்டில் மன்னாரில் புதிதாகக் கட்டப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தையும் எம்மைப் பொறுப்பேற்கும் படி கூறியுள்ளார்.

**உங்களது இந்தப் பணிகள் எல்லாம் ஏனைய மதத்தவர்களைக் கவர்ந்து மதம் மாற்றும் திட்டத்தின் அடிப்படையில் தான் செய்கின்றீர்கள் எனும் குற்றச்சாட்டுக்கு என்ன பதில் சொல்லுகின்றீர்கள்?**

நாம் கிறிஸ்தவர்கள். எமது வாழ்க்கை கிறிஸ்தவ மதிப்பீடுகளைக் கொண்டதாக, அதை மற்றவர்களுக்கு அறிவிக்கும் தன்மையதாக அமைய வேண்டும் என்பதில் பூரண நம்பிக்கையுடையவன் நான். கிறிஸ்தவனின் பணி பணம், பொருள், வீடு இவற்றைமனிதனுக்குக் கொடுப்பது மட்டுமன்று கிறிஸ்து எப்படித் தானும் சாதாரண மனிதனாக வாழ்ந்து மக்களோடு வாழ்ந்து முழுமனித உருவாக்கலுக்கு உழைத்தாரோ அதேபோன்று கிறிஸ்தவனும் கிறிஸ்துவாக மாறி

உழைக்கவேண்டும். என்பது எனது ஆசை. அப்படி நாம் வாழும் வாழ்க்கை மற்றவர் களிடம் மதமாற்றத்தை ஏற் படுத்துமாகில் அவர்களை ஏற் றுக் கொள்வதில் தவறில்லை. அது எமது கடமையும் கூட என்பதில் நான் நம்பிக்கை உள்ளவன். அது தவிர நேரடி யான மதமாற்றம் தான் எமது நோக்கம் என்று சொல்லமாட்டேன். ஆன்மீக லௌகீக வளர்ச்சியுற்ற முழு மனித உருவாக்கலே எமது முதல் இலட்சியமாகும்.

**உங்களது இந்தப்பணி தற்போ தையில் சிறப்பாகச் செய்யப்பட இன்னும் எதை எதிர்பார்க்கிறீர் கள்?**

நான் எதிர்பார்ப்பதெல் லாம் எமது இந்த முழுமனித உருவாக்கல் முயற்சிக்குத் தம்மை முழுமையாக அர்ப்ப ணிக்க இன்று எம்மோடுஇயங் கும் துறவிகள், பொதுநிலையி னரைப் போன்று இன்னும் பலர் முன்வரவேண்டும். அவர் கள் தம் தன்னலமற்ற பணி யால் பலரின் வாழ்வில் உத யங்கள் ஏற்படவேண்டும்.

இறுதியாக ஒன்றைக்கூற விரும் புகின்றேன். 1981ல் சேர்க்கப் படும் தவக்கால நிதியானது பகிர்தல் என்ற நோக்கோடு சேகரிக்கப் படுகிறது. இது தனக்கு மிஞ்சியதை கொடுப்ப தல்ல. தனக்கென்று உள்ள தைப் பகிர்ந்தளிக்கும் தியாக நிதியாகும். இந்தநிதி சேகரிப் புக்காக அடுத்த வருடம் நாடகங்கள், திரைப்படங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலம் மக்க ளுக்குள் இவ்வுணர்வை விதைக்க முயற்சிகள் மேற் கொள்ளவுள்ளோம்

---

★ ஒரு மக்கு நண்பன் இருப்பதைக் காட்டிலும் ஐந்து சுறுசுறுப்பான எதிராளிகள் இருப்பது மேல்.

— லூதர் பர்பாங்.

★ நிச்சய புத்தி இல்லாதவனையும் நீலித்தனமாகப் பேசுபவனையும் நன்றி மறப்பவனையும் நண்பனுக்கிக் கொள்ளாதே. அவனால் ஆபத்தும் அவமானமும் ஏற்படும்.

— ஜெசி

— தொகுத்தவர்: ஆர். எஸ். செல்வரட்ணம் —

# மங்கை வாழ்வு

— புலவர் போல் —

பொரிக்கின்ற மீனெல்லாம் தனக்கென் றெண்ணும்
பூனையென இளைஞரெல்லாம் அழகு கொஞ்சும்
சிரிக்கின்ற பொன் மலராம் குமரிப் பெண்கள்
சிந்தைமகிழ் கமுகூஞ்சல் ஆட்டம் காணும்
வரிவண்டு மதுவுண்ட மயக்கக் காமம்
மனம்போன போக்கினிலே காத லென்று
உரிமையுடன் போர்தொடுக்கும் பருவ காலம்
உட்பஞ்சு கண்டகிளி நிலையே யானேம்

மனக்குரங்கு தாவுகின்ற இளைஞர் காலம்
மங்கையரை மயக்குதற்குக் கண்ணி போடும்
இனமிகுந்த மாம்பழங்கள் விற்போர் கூறும்
இதமான வார்த்தையிலே மயங்கி வாங்கி
கனமிழந்து நிற்கையிலே சுவைத்தேன் சொட்டும்
கறுப்புடைய கொழும்பானே வாங்க லாமோ
மனமாய்ந்து தேர்ந்தகனி மங்கை யாளை
மணப்பதுவும் மாங்கல்ய தரும மன்றோ

பெண்பெருமை வாழ்க்கையிலே கைகொடுக்க
பெண்புத்தி தூண்டுகின்ற பின்புத்தியாம்
பெண்குலத்தின் உள்ளழகின் அடக்கம் கண்டு
பேறுபெற்ற மாதவத்தின் பொக்ஷ முண்டு
கண்டுகொண்ட கணவனன்றோ கண்ட தெய்வம்
கார்முகிலும் பொழிய வைக்கும் கற்பு மிக்காள்
உண்டெறிந்த கனியல்ல உடுத்த சீலை
உரிந்தெறிந்த நிலையல்ல மங்கை வாழ்வே

# கருத்து மோதல்



## மாவட்ட அபிவிருத்திச் சபைகளால்

இம்மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் மூலம் ஒவ்வொரு மாவட்டடங்களிலுள்ள குறைநிறைகளை, அம்மாவட்டங்களிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட அமைச்சர்கள், அரசாங்க அதிபர்கள், உட்பட பல பிரமுகர்கள் கவனத்துக்குக் கொணர்ந்து அம்மாவட்டங்களை அபிவிருத்தி அடையச் செய்வதே இச்சபைகளின் முக்கிய முதல் நோக்கமாகும்.

இவ்வேளையில் இச்சபைகளால் தமிழருக்கு நன்மைகள் ஏதேனும் உண்டா? என்று நோக்குமிடத்து ஆயிரமாயிரம் உண்டு எனக் கூற



லாம். தமிழர்கள் வாழும் பிரதேசங்கள் சிங்களவர் வாழும் பிரதேசங்களைவிட மிகவும் பின் தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றன. இவற்றிலும் மிகப்பின் தங்கிய மாவட்டங்களான மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களை நோக்கினல் அண்மையில் சூறுவளியின் தாக்கத்திற்கு இலக்கான மட்டக்களப்பு மாவட்டம் மீண்டும் புத்துயிர் பெறவேண்டுமாயின் இம்மாவட்ட அபிவிருத்திச்சபைகள் அவசியமே.

கடல் பிரதேசமாவுகம் அதிவரண்ட பிரதேசமாகவும் காட்சிதரும் மன்னார்ப்பிரதேச மக்களின்

## தமிழருக்கு நன்மைகள் உண்டு

மனக்குறைகள் நீங்க வேண்டுமாயின் இம்மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அவசியமே. மொத்தத்தில் தமிழர்களுக்கு இம்மாவட்ட சபைகள் அவசியமே. இப்பிரதேசங்களில் வாழும் தமிழர்கள் தனிநாட்டுக்கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தவர்களே. இவர்கள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஆதரிப்பதால் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டு விட்டார்கள் என்ற எண்ணத்திற்கு இடமில்லை. நாம் முதலில் எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டும். பல மாதிரிக் கிராமங்கள் நிறுவ முயற்சி செய்தல் வேண்டும். இதை விடுத்து "சாப்பிட உணவில்லாதவன் உண்ணாவிரதமிருப்பது" போன்று நமது பின்தங்கிய மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலில் வழியைப் பார்த்துவிட்டுப் பின்னர் நமது கொள்கையை நிறைவேற்றுவோம்.

பரிசு பெறுபவர்:

S. L. பற்றிக்
I-ம் வட்டாரம்
வங்காலை.

பாராட்டுப் பெறுபவர்கள்

றமேஷ் வேதநாயகம்
ஊர்காவற்றுறை.

செல்வி. ரூஜி ராமசாமி
இளவாலை

செ. யேசுதாசன்
செம்மண்தீவு.

டானியல் ரேச்
மன்னார்.

எஸ். புஸ்பராணி
அந்திரேஸ் முதலியார்

தமிழர்கள் பிரச்சனை இன்றோ நாளையோ தீர்வு காணக்கூடிய பிரச்சினையல்ல. அதுவரையில் நாம் உயிருடனும், பலமுடனும் ஓரளவு நிம்மதியுடனும் வாழ்வதற்கு இம்மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அவசியமே. இலங்கையின் ஏனைய மாவட்டங்களை எடுத்து நோக்கினல் எவ்வளவு அபிவிருத்தி வேலைகள், மாதிரிக் கிராமங்கள், மின்சார, குடிநீர், கைத்தொழில், விவசாய வேலை வாய்ப்பு வசதிகள் எல்லாம் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவ்வேளையில் தமிழர்கள் வாழும் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற அரசின் நல்நோக்கத்தை நாம் இன்னும் புரியாமல் இருக்கின்றோம். ஏன், இம்மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அரச மத.

பீடங்களான, அஸ்கரிய, மல்வத்தைப் பீடங்கள் எதிர்க்கவில்லையா? ஏன் எதிர்த்தார்கள்? இச்சபைகள் மூலம் தமிழர்கள் மாவட்டம் அபிவிருத்தியடைந்துவிடும், தமிழர்கள் இந்நாட்டில் படிப்படியாக உரிமைகளை நிலைநாட்டி விடுவார்கள் என்ற அச்சமாக இருக்கலாம் அல்லவா?

இன்று மாவட்ட அபிவிருத்திச் சபைகளாக இருந்து நாளை பிரதேச அபிவிருத்திச்சபையாகவோ அன்றேல் பிரதேச ஆட்சியாகவோ மாறிப் பின் தமிழ் மக்களுக்கென்று தனி நாடு கிடைக்கலாம் அல்லவா?

ஆகவே எமது தமிழ்த் தலைவர்கள் அறிவாளிகள். முன்பின் யோசிக்காமல் எதையும் விரும்பவோ, செய்யவோ மாட்டார்கள் எனக் கூறி இம்மாவட்ட அபிவிருத்திச் சபைகளால் இன்றோ அல்லது நாளையோ தமிழ்மக்களுக்கு நன்மைகள் பல உண்டு எனத் திட்டவட்டமாகக் கூறுகிறேன்.

## கருத்து மோதல்—அடுத்த போட்டி

இன்றைய சமய வளர்ச்சிக்கு

—பயமே காரணம்

—பக்தியே காரணம்

இவற்றிற்குச் சாதகமாகவும், பாதகமாகவும் தோன்றும் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.

விதிகள் :

* தயவுசெய்து தெளிவாகவும், ஒழுங்காகவும் எழுதியனுப்புங்கள்

* ஒருவரே சாதகமாகவும், பாதகமாகவும் வாதங்களை ஒருங்கிணைந்து எழுதக்கூடாது.

* மார்கழித்திங்கள் முப்பத்தோராம் (31-12-1980) நாளுக்கு முன்னர் உங்கள் வாதத்தை அனுப்புங்கள்.

* சிறந்த வாதங்களுக்கு இருசாரிலும் பரிசுகள் உண்டு.

* தகுந்த ஆதாரங்களுடன் சுருக்கமாக ஆனால், தெளிவாக இருபக்கங்களுக்கு மேற்படாமல் முழுத்தாளில் (13" × 4") உங்கள் வாதத்தை (கூடுமானால் ஒரு பக்கத்தில் மட்டும்) வரைந்து அனுப்புங்கள்.

* ஆக்கங்கள்அனைத்தும் கருத்துமோதல், புதியஉலகம், த.பெ. எண் 2, யாழ்ப்பாணம் முகவரிக்கே அனுப்பவேண்டும்.

# மாவட்ட அபிவிருத்திச் சபையால்

பரிசு பெறுபவர்:

அ. அமலநாதன்.
இறிச்சாட் வீதி
முள்ளியவளை.

சாக்கடை அரசியலில் அள்ளுண்டு ஆச்சரியப்படும் வகையில் எதிர்க்கட்சி ஆசனங்களை அலங்கரிப்பவர்கள் நம் தலைவர்கள். மக்கள் தீர்ப்பு எனக் கருதப்படும் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை வாக்குகள் பெற்று, ஆறில் ஐந்து பெரும்பான்மை அங்கத்தவர்களுடன் ஆளும் கட்சியினர் அரசியற்ற சந்தர்ப்பவசமான எதிர்க்கட்சி நிலையில் தமிழ்த் தலைவர்கள் தரித்திருக்கிறார்கள்.

பெயரளவில் எதிர்க்கட்சியே தவிர, அவர்களின் பொருள் செறிந்த பேச்சும்' கருத்தொருமித்த விவாதமும் ஆளும் கட்சியின் முன் 'செவிடன் காதில் ஊதிய சங்கே' எதிர்க்கட்சியை தம்வசமாக்க பல முனைத்தாக்கலும், கண்ணிகளும் வைக்கும் ஆளும் கட்சியின் பின்னைய பொறிதான் ''மாவட்ட அபிவிருத்திச்சபை''. இலங்கை ஒரு நாடு அதற்கு அமைச்சர்கள் அவர்களுக்கு உப அமைச்சர்கள் போதாததிற்கு மாவட்ட அமைச்சர்கள்.

மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்கு கட்சி அபேட்சகர்கள் நிறுத்தப்பட்டு வாக்கு வேட்டை நடாத்தப்படும். தமிழ் பிரதேசங்களில் தமிழ்த் தலைவர் தான் தெரிவுசெய்யப்பட்டார்களேயெனினும் அவர்களின் கையாலாகாத்தனம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

பல்கலைக்கழக புகுமுகத்தில், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களில், அபிவிருத்தியின் அடிச்சுவடுகளில், ஆக்கிரமிப்பின் அசுர வேகத்தில், மாவட்ட அபிவிருத்திச்சபை என்னதான் செய்துவிட முடியும். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்வு மக்கள் மனதின் புள்ளிவிபரக் கணக்கெடுப்பேயன்றி வேறொன்றுமில்லை. அபிவிருத்தி என்றும் வளர்முகநாடு என்

# தமிழருக்கு நன்மைகள் இல்லை

றும் பிதற்றுமிவர்களுக்கு, நாட்டு முன்னேற்றம் கருத்திலிருக்குமெனில், அதற்கு மாவட்ட அபிவிருத்திச்சபை வேண்டியதொன்றல்ல. ''மனமிருந்தால் இடமுண்டு'' சபைகள் சங்கங்கள் வேண்டியதில்லை.

இலங்கைத் தமிழரின் இன்னல் நிலை, பிற நாடுகளில் பிரசாரமாகும் இவ்வேளையில், மாவட்ட அபிவிருத்திச்சபையை தமிழர் ஏற்றுக் கொள்வது விவேகமானதா? ஆளும் கட்சியினர் சென்ற இடமெல்லாம் ''தமிழர் மாவட் அபிவிருத்திச்சபையை ஏற்றுவிட்டார்கள்'' என்று பறையறைந்து அறிவிக்க, ''வெண்ணை திரளும் போது தாழி உடைவதா''?

முன்பு கிராமச் சபைகளையும், பட்டின சபைகளையும் கலைத்தது போல், அமைச்சர் நினைத்தவுடனேயே மாவட்ட அபிவிருத்திச் சபைகளைக் கலைக்க முடியாது. இளைப்பாறிய நீதியரசர் ஒருவரின் பூரண விசாரணையின் பின் குற்றம் காணப்பட்டால் மட்டுமே கலைக்கலாம். அதுவும் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டே முடிவு எடுக்கப்படும்''. என்ற தமிழ் தலைவர்களின் கருத்துக்களின் அடிப்படையில் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் கூட கலைக்கப்படலாம். ஜனநாயகம்-பெரும்பான்மை சர்வாதிகாரம் நிலவும் நம் நாட்டில், மாவட்ட சபைகளில் இளைப்பாறிய நீதியரசர் குற்றம் காண்பதோ, அல்லது, பாராளுமன்ற விவாதத்தில் சாதகப் பெரும்பான்மை கிடைப்பதோ, இலகுவானதாகலாம்.

பாராட்டுப் பெறுபவர்கள்

கு. ந. இராசநாயகம்
யாழ்ப்பாணம்.

செல்வி ஹெலன் ரேசாறி
வர்க்கீஸ்
ஏறுவூர்-4

செல்வி. வே. தனுஜா
திருகோணமலை

சத்தியலட்சுமி சர்வானந்தம்.
மட்டுநகர்.

ம. கி. அருள் ஞானம்
காங்கேசன்துறை

S. J. தேவகுமாரன்.
மணியர் குளம்.

சுருங்கக் கூறின், மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் மாபெரும் வெற்றி பெற்றாலும் கூட ஒன்றுமில்லை. ''அகப்பை பிடிப்பவன் தன் கையாளானால் அடிப்பந்தியென்ன, நுனிப்பந்தியென்ன'' என்பதே தமிழர் நிலை. கடிவாளமிடப்பட்ட குதிரை சுண்டு விசைப்படி ஓடுமே ஒழிய சுயாதீனமாக ஓட முடியாதே. எனவே மாவட்ட அபிவிருத்திச் சபைகளால் தமிழருக்கு நன்மைகள் இல்லை என்பதே என் கருத்து.

பத்திரிகை

# எழுத்தாளரை ஏமாற்றிய எழுத்தாளர் கருத்தரங்கம்

★ நாவண்ணன்

21—11—80 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 2-30 முதல் 7-15 வரை யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் இலங்கைக் கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பத்திரிகை எழுத்தாளர்கருத்தரங்கம் நடைபெற்றது — பயன் மிக்கதும்—பத்திரிகை எழுத்தாளர்களுக்கு அவசியமானதுமான இக் கருத்தரங்கத்தை ஒழுங்கு செய்த ஒன்றியத்தினர்கள் பாராட்டுக்கு உரியவர்களே !

ஆனால்,

பத்திரிகை எழுத்தாளர்களுக்காக நடைபெற்ற கருத்தரங்கத்தில் பத்திரிகை எழுத்தாளர்கள் கருத்துக்களை எடுத்துக் கூறச் சந்தர்ப்பம் கொடுககப்படாமல் முடிவுற்றது வேதனைக்குரியதே.

நான்கு மணித்தியாலங்களுக்கு மேலாக நடைபெற்ற இக்கருத்தரங்கத்தில் உரை நிகழ்த்தியவர்களில் ஒரு சிலரைத் தவிர ஏனையோர் 'அறுவைகள்' என்பதில் சந்தேகம் இல்லை. இந்த அலுப்புகளையும் எழுத்தாளர்கள் சகித்துக் கொண்டு தொலை தூரம் போக வேண்டியவர்களாக இருந்தும் இடுப்பு நோவையும் சகித்துக்கொண்டிருந்தார்களென்றால்தமது கருத்துக்களுக்கும் இடம் வழங்கப்படும் என்பதனாலே.

இதற்குக் கருத்தரங்கம் நடைபெற்ற மண்டபம் 7-00 மணிக்கே விடவேண்டும் என்று காரணம் கூறப்பட்டது. அது ஏற்றுக் கொள்ளக் கூடியதுதான். ஆனால்..... இதன் விளைவு என்ன ?

அங்கு பேசியவர்கள் பேச்சை எல்லாம் தெய்வவாக்காக ஏற்றுக்கொள்ள வேண்டிய பேயர்களாக எழுத்தாளர்கள் கணிக்கப்பட்டதுதான்.

உதாரணத்துக்கு ஒரு சம்பவம், இலங்கையிலே வெளிவரும் எல்லாக் கலை இலக்கிய ஏடுகளுக்கும் ஏதோ ஒன்று பின்னணியாக உள்ளது எனும் கருத்தைக் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் கூறினார், எம்மைப் போன்றவர் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்றாலும் அதை அப்படியே நம்பியவர்களும் கருத்தரங்கம் முடிந்து வெளியே வந்தபோது உணர முடிந்தது.

பத்திரிகையும், இலக்கியமும் பற்றி உரை நிகழ்த்திய கலாநிதியவர்கள், நகைச்சுவை இலக்கியம் பற்றி ஒரு வார்த்தைதானும் சொல்லாதது போகட்டும். ஆனால் இற்றைக்கு 18 ஆண்டுகளாகத் தனி மனிதனி முயற்சியாக — தரமான, ஆபாசமற்ற—கலை அம்சம் மிக்க நகைச்சுவை இலக்கிய ஏடாக வெளிவரும் 'சிரித்திரன்' பற்றி அவர் குறிப்பிடாதது தவறு — அவரது அந்தத் தவறை அங்கு சுட்டிக் காட்டவும் சந்தர்ப்பம் கொடுக்கப்படாததின் விளைவு—அரங்கத்துக்கு வந்திருந்த அனுபவம் இல்லாத ஒருவர் என நினைக்கின்றேன், சிரித்திரனும் எதையோ பின்னணியில் கொண்டது என்று கூறிய பரிதாபத்தைக் காணக் கூடியதாக இருந்தது.

கலைஇலக்கிய ஏடுகள் விமர்சனங்கள் பற்றி அண்மையில் வானொலியில் இடம் பெறும் உரைகளில் கூடச் சிரித்திரன் போன்ற தரமான பத்திரிகைகள் புறக்கணிக்கப்படுவதையும் இந்த இடத்தில் சுட்டிக்காட்டுவது பொருந்தும்.

ஜனவரியில் நடக்கவிருக்கும் கருத்தரங்கில் எழுத்தாளர் கருத்துக்களுக்குக் கட்டாயம் சந்தர்ப்பம் கொடுக்கப்படும் என்று ஒன்றியத்தார் கூறினாலும் இந்தக் கருத்தரங்கில் வந்திருந்த கூட்டத்துக்கு ஏற்பட்ட தப்பெண்ணத்தையும், ஏமாற்றத்தையும் ஒன்றியத்தாரால் நிவர்த்தி செய்ய முடியுமா ?

இன்னுமொன்றையும் கூறத்தான் வேண்டும் — அது இத்தகைய கருத்தரங்குகளுக்கு உரை நிகழ்த்தவரும் பெருமக்கள் தமது உரை முடிந்ததும் பறந்து செல்லும் பண்போடு வருதல் கூடாது. இக்கருத்தரங்கத்துக்கு உரை நிகழ்த்த அழைக்கப்பட்டவர்களில் ஒருவராவது அரங்கம் முடிவுற்ற சமயத்தில் இருக்கவில்லை, இவர்கள் உரைகளில் ஏற்பட்ட சந்தேகங்களை யாரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது ? ஒருவேளை எழுத்தாளர்கள் கருத்துகளுக்கு இடம் கொடுக்கப்பட மாட்டாது என்பதைத் தீர்க்கதரிசனமாய் உணர்ந்து தான் இவர்கள் வெளியேறினார்களோ.

பத்திரிகை எழுத்தாளர்களுக்குப் பயன் தரக்கூடிய இக்கருத்தரங்கு இறுதியில் வருத்தும் அரங்காக முடிவுற்றது. இனிமேலும் இவர்கள் நடாத்தும் கருத்தரங்குகளில் இந்த நிலை எழுத்தாளர்களுக்கு ஏற்படாமல் செய்வார்களா ?

---

உனது நண்பர்களை இழக்காமல் பாகாக்க விரும்பினால் அடிக்கடி அவர்களுக்குப் புத்திமதி சொல்வதைத் தவிர்.

— அன்டனி ஈடன்

▶ குணசீலன் அடிகளார் கூறுகிறார்......

# நொறுங்கிய இதயங்கள் 2

புதிய உலகம் சஞ்சிகையில் எனது கட்டுரைகள் வெளிவந்ததைத் தொடர்ந்து பலரிடமிருந்து எனக்குக் கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. இம்முறை புதிய உலகத்துக்கு எதைப்பற்றி எழுதுவது என்று நான் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே குடிகாரக் குடும்பத் தலைவனால் வருந்தும் ஒரு குடும்பத்திலிருந்து பரிதாபமான கடிதம் ஒன்று எனக்கு வந்தது. எனவேதான் அவருக்கும் அவரைப்போன்ற பிரச்சனையுள்ள ஏனையோருக்குமாக இம்முறை இதைத் தருகின்றேன்.

குடிவெறித் தன்மையானது ஒரு குடும்ப வியாதியாகும். ஆனால் இதனை ஒரு வியாதியென்றோ அதிலும் ஒரு குடும்ப வியாதியென்றோ ஏற்றுக் கொள்பவர்கள் எத்தனை பேர்? இந்நோயால் மது அருந்துபவர் மட்டுமல்ல, குடும்பத்தில் 3, 4 பேர் ஒரே வேளையில் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இத்தாக்கங்கள் உணர்வு. ஆன்மீக, உடல் ரீதியாக ஏற்படுகின்றன.

இந்நோயின் தாக்கத்துக்கு இலக்காகி என்னிடம் வந்த ஒரு குடும்பத்தின் சோக நிலையை விபரிக்க விரும்புகின்றேன்.

அந்தக் குடும்பத் தலைவன் ஸ்தாபனமொன்றில் உயர் பதவியில்இருப்பவர். கைநிறைந்த வருமானம். வசதியாக வாழக்கூடிய நிலை. ஆனால் ஒரு நிரந்தரக் குடிகாரன். தான் குடித்தாலும் தளம்பாதவர் எனும் ஒரு விதவரட்டுத் துணிவு அவரிடம். தான் வேலைக்கு ஒழுங்காகச் செல்வதாக ஒரு நினைப்பு (ஆனால் நடைமுறையில் இல்லை). இவரது இந்த நிலைமை ஸ்தாபனத்தில் உயர் மட்டத்தின் கவனத்துக்கு வந்தது. 'இந்த மதுப்பழக்கத்தை விடாவிட்டால் பதவியை இழக்க நேரிடும்' என்ற எச்சரிக்கையும் வந்தது. இதன் விளைவு.......... !

குடும்பத் தலைவி அதிர்ச்சிக்குள்ளானாள். வாழ்க்கையை எப்

படிச் சமாளிக்கப் போகின்றோம்? பிள்ளைகளினதும் தனதும் எதிர் காலம் என்ன? என்ற ஏக்கம் அவளிடம் குடிகொண்டது. நித்திரையை மறந்தாள். இந்த நினைவுகள் அவளை உருக்குலைத்தது.

மூத்த பெண், தந்தையின் போக்குகளால்—அவரது இழிவான சொல் செயலால் அவரை மதிக்காத மனநிலை. அதன் விளைவு அவளது தம்பியின் நண்பர்களில் ஒருவனைத் தனது 16 வயதிலேயே தனக்குத் துணையாக்கிக் கொண்டாள். பின்னர் அவள் குடும்ப வாழ்வினதும் நிம்மதியில்லை, குடும்பப் பிரச்சனைகள்.....!

மகன், குடிகாரன் மகன் என்ற அவப் பெயர் அவனுக்கு. தந்தை பெரிய பதவியில் இருந்தும் பாடசாலைத் தேவைகளைச் சமாளிக்க முடியாத நிலை. அடுத்தவரின் பழிப்புகள், நெளிப்புகள். இவற்றால் மனமுடைந்து 14 வயதிலேயே படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டான். கெட்ட நண்பர்களின் உறவு (அக்காவின் கணவனும் இவர்களில் ஒருவன்) சினிமா — நேரம் கடந்து வீடு திரும்புதல், இவனது இந்தப் போக்குத் தாயை மேலும் அமைதி குலைய வைத்தது.

இளைய மகள் வயது 12. குடும்பத்தின் மூத்தவர்களின் வாழ்க்கைமுறை அவளை நரம்புத்தளர்ச் சிக்குள்ளாக்கியது. எப்போதும், எதற்கும் அஞ்சிய சுபாவம், தாயை விட்டுப் பிரிய முடியாத மனோநிலை, 'வகுப்பில் படிக்கக் கூடியவளாக இருந்தும் மனதில் எதையும் பதிய வைத்துக் கொள்ள அவளால் முடியவில்லை' என்பது ஆசிரியர்களின் முறைப்பாடு.

இந்தக் குடும்பத்தின் இத்தகைய பரிதாப நிலைக்குக் காரணம் என்ன? குடும்பத் தலைவனைப் பீடித்திருந்த மதுவெறி நோய் தான். அதன் பயன் அக்குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஏதோ ஒரு விதத்தில் நோயாளிகளாகவே காணப்படுகின்றனர். எனவேதான் குடிவெறித்தன்மையானது ஒரு குடும்ப நோய் என்று கூறப்படுகின்றது.

எனவே இந்தக் குடிவெறி நோயாளிக்கும் — அவரால் நோயாளிகளாகி, அடுத்தவர்களால் நோயாளிகள் என்று கருதப்படாத அவரைச் சார்ந்த நோயாளிகளான அக்குடும்பஉறுப்பினர்களும் பரிதாபத்துக்குரியவர்கள். அவர்களுக்கு நாம் எப்படி உதவலாம் என்பதை உணர வேண்டும்.

மீளமுடியாத துயரமும் இல்லை. வெல்ல முடியாத சூழ்நிலையும் இல்லையெனும் தெளிவு எமக்கு ஏற்பட வேண்டும். முதலில் குடிவெறியானது ஒரு நோய் என்பதை ஏற்றுக்கொள்ளும் மனப்

பக்குவம் தேவை. அதே வேளையில் அவ்வியாதியை வெற்றி கொள்ளும் சக்தியும் எமக்கு இல்லை என்பதையும் நாம் திடமாக உணர்தல் வேண்டும்.

மனித இயல்புகளின்படி இவ்வியாதிக்காரர்களால் ஏற்படக்கூடிய ஆத்திரம், அருவருப்பு, மனநோவு இவற்றைத் தாங்கிக் கொள்ள ஆன்மீக பலம் வேண்டும். அன்றேல், நாமே விரக்தி நோய்க்கு ஆளாக நேரிடும். அவரது போக்கினை அறிந்து அதற்கு ஏற்ப நாம் நமது நடைமுறைகளைக் கையாளுவதன் மூலம் தான் தனக்கு எமது உதவி தேவை எனும் தன்னம்பிக்கையற்ற நிலையை அவருக்கு நாம் ஏற்படுத்தலாம். ஒருவர் இந்த வியாதியைக் கட்டுப்படுத்தலாமே ஒழிய ஆட்கொள்ள முடியாது என்ற அடிப்படை உண்மையை எப்பொழுதும் மறந்து விடக் கூடாது.

ஒரு குடிகாரனையோ. அவனது நடைமுறைகளையோ குறை சொல்ல வேண்டாம். ஏனெனில் அவன் ஒரு இரக்கப்பட வேண்டிய நோயாளி.

நாம் ஒரு காசநோயாளியையோ, புற்றுநோயாளியையோ சர்க்கரை வியாதிக்காரனையோ ஒருபோதும் நிராகரிக்க மாட்டோம். பதிலாக அவனுக்காக இரக்கப்படுவோம் — அவனுக்கு உதவ முன்வருவோம். அவர்களின் நிலையில் வைத்து நோக்கப்பட வேண்டிய நோயாளியே இந்தக் குடிகாரனும். ஆனால் இதுவரையில் நாம் யாரும் அவனை இக்கண்கொண்டு பார்த்தது கிடையாது. இந்த நோயாளிக்கு முதன் முதலில் செய்யக் கூடிய ஒரு உதவி அவனை ஒரு நோயாளி என்று ஏற்றுக்கொள்ளுவதே.

எமது தன்மான உணர்வு, அவமான உணர்வு, அடுத்தவர் என்ன சொல்வார் எனும் நினைவு இவைகள் அர்த்தமற்றவையே. அவனை ஒரு நோயாளி என்று உணராத நிலையில் உள்ள அடுத்தவர்களின் உணர்வுகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை.

குடிகாரனைப் பொறுத்தவரை மது என்பது அவனது தவிர்க்க முடியாத தேவைகளில் ஒன்று. இத்தீய பழக்கத்தைக் கைவிடலாம் என்ற தன் நம்பிக்கையை ஊட்டுவதன் மூலம் இதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடலாம் என்று தீர்மானிப்பது தவறான முடிவாகும். ஏனெனில் அப்படி விட்டுவிடத் தீர்மானிப்பவனது உள்ளத்தையும், உடலையும் ஒருங்கே உபாதித்து — அவனை அணு அணுவாய் வதைத்தே மீண்டும் அப்பழக்கத்துள் தள்ளி விடும்.

குடியின் விளைவுகளை அவன் அறிவான். குடி குடியைக் கெடுக்கும்

என்ற உண்மையையும் உணர்வான். உடலுக்குக் கேடு என்பதை, நண்பர்கள் உறவினர்கள் வெறுப்பதை,, சமுதாயத்தில் தனக்கு மதிப்பில்லை என்பதையெல்லாம் நன்கு உணர்வான். ஆனால் இந்த உணர்வுகளே இந்தக் குடித்தீயை வளர்க்கும் நெய்யாக விளங்கும். இந்த உணர்வுகளின் தாக்கமே அவனை மேலும் மேலும் குடிக்கத் தூண்டும்.

இவன் திருந்த வேண்டும் என்பதற்காகத் திட்டலாம். ஏசலாம், பணத்தை ஒழித்து வைக்கலாம், பயமுறுத்தலாம், அவனை ஒதுக்கி வைக்கலாம். ஆனால் இவை அவனைத் திருத்துவதற்குப் பதிலாகத் தீவிரமடையவே செய்யும். இவை அனைத்தையும் மீறி அவன் எப்படியோ வெறியோடு வந்து நிற்பதையே நாம் காணலாம்.

இந்த நோயாளியைக் குணப்படுத்த முடியுமா? இவ்வினவுக்குரிய விடை மிகவும் கடினமானதுதான். ஏனெனில் ஒரு குடிகாரன், தான் குடிகாரன் என்பதை ஏற்றுக்கொள்வதில்லை. நினைத்தால் தான் குடிக்காமல் இருப்பேன் என்றும் சவால் விடுவான். ஆனால் அவனால் அது முடியாத காரியம் என்பது அவனுக்கே தெரியும். இம்மனோநிலையில் இருக்கும் அவனுக்கு அடுத்தவரை உதாரணம் காட்டிப் பேசுவது அறவே பிடிக்காத விடயமாகும். அப்படிப் பேசுவதை அவன் தன்னை அவமதிப்பதாகவே கருதி ஆவேசமடைவான். அவனுள்ளே குற்ற உணர்வையும், தன்நம்பிக்கையீனத்தையும் மேலும் கொண்டு வரும்.

இந்த நோயாளிகளிடம் இருக்கக்கூடிய குணாதிசயங்கள்

(1) Introjection — தன்னுள் விழுங்குதல்? (எதையும் பகுத்துணர்ந்து பாராமல் அடுத்தவர் கூறுவதை அப்படியே ஏற்றுக் கொள்ளுதல், வெள்ளையைக் கறுப்பு என்றாலும் சிந்திக்காமல் ஏற்றுக் கொள்வது போன்ற செயல்கள்).

(2) Projection — பிறர்மேல் பிரதிபலித்தல். (தன்னைப் போலவே மற்றவனும். தனது குணங்களை மற்றவனிடமும் இருக்கும் என்று நினைத்தல்).

(3) Retroflection — தன்மேல் திரும்புதல் (அடுத்தவன் மேல் உள்ள ஆத்திரத்தை வெளிக்காட்டாமல் தனக்குள்ளாகவே வைத்திருந்து, தானே குற்றவாளி என்பதுபோல் கூறி அழுது ஆரவாரம் செய்வதுபேன்ற செயல்கள்)

(4) Conflunce — தன்நிலை இழத்தல் (தான் விரும்பாதவற்றை மற்றவர்களும் விரும்பக் கூடாது. அதன்மேல் சந்தேகங்கள் இவைபோன்றவை)

இத்தன்மைவாய்ந்த குடிவெறி நோயாளியைப்பற்றி உளநூல் அறிஞர்களும், மனநோய் வைத்தியர்களும் அனுபவரீதியாக, ஆய்வுகள் ரீதியாக எடுத்துள்ள முடிவு யாதெனில் "இவர்களை மனம் திறந்து ஒளிவுமறைவின்றிப் பேசவைப்பதோ, அவர்களை தாம் குடிகாரர்தான் என்று ஏற்றுக்கொள்ளவைப்பதோ மிகக் கஷ்டமான காரியமாகும். இதில் இன்னுமொரு விஷேடம் என்னவெனில் தம் மனைவி மக்கள் உயிர் நண்பர்களிடமே தான் குடிகாரன்தான் என்று இதயபூர்வமாக ஏற்றுக்கொள்ளமாட்

டான். இந்த நிலையில் வைத்தியர்களால் எப்படி இவர்களை ஏற்றுக்கொள்ள வைக்கமுடியும்?'' என்பதே.

ஆனால், உறவினர்களாலோ, உயிர் நண்பர்களாலோ, வைத்தியர்களாலோ முடியாதஇச்சாதனையை—முன்னர் குடிகாரனாயிருந்துதான் ஒரு குடிகாரன் தான் என்ற உண்மையை ஏற்று திருந்திய ஒருவன் தனது கருத்தை, மனதை, அனுபவங்களை அவன் முன் மனம் திறந்து வெளியிட்டு அவனது நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட பின்னர்தான் அவனிடம் இருந்து உண்மையைக் கிரகிக்கவும் ஏற்றுக்கொள்ள வைக்கவும் முடியும். அவனாலேயே அந்த நோயாளிக்கு கைகொடுத்து உதவ முடியும். இப்படி அக்குடி நோயாளி தன்னை உணர்ந்து ஏற்றுக்கொண்ட பின்னரே அவனுக்குச் செய்யவேண்டிய வைத்திய நடவடிக்கைகள் பயன் மிகுந்தவையாக அமையும்.

இந்தவிதமான வைத்திய முறையையே தற்பொழுது நான் இந்தக் குடிநோயாளர் மீது கையாண்டு வருகின்றேன். முன்னர் குடிவெறிகாரர்களாகத் திரிந்து, தம்மை உணர்ந்து, ஏற்றுக்கொண்டு திருந்திய ஏழுபேர் அடங்கிய குழு ஒன்று எனக்கு இப்பொழுது உதவி செய்கிறது.

இறுதியில் ஒன்றை நான் வலியுறுத்திக் கூற விரும்புகின்றேன். ''குடிகாரனை ஒருநோயாளி என்று ஏற்றுக்கொண்டு அன்பு செய்யுங்கள். இதன் மூலம் குடிகாரன் தன்னை உணர்ந்து ஏற்றுக்கொள்ளவைத்தாற்றான் மீட்சியுண்டு. ஏனெனில் தன்னுணர்வே தன்னைக் குணமாக்கும்.

---

கேட்டு எழுதியவர் :

நாவண்ணன்

---

அன்புள்ள வாசகர்களே !

உங்கள் அனைவரினதும் அன்புக்கட்டளைகள் கிடைக்கப் பெற்றோம். புதிய உலகம் 1-50 விற்கப்படுவதை எல்லோரும் ஆதரித்து எழுதியுள்ளீர்கள். ஒருசிலர் புதியவிலைப்படி 1981-ம் ஆண்டிற்கான சந்தாப்பணத்தை அனுப்பி வைத்துள்ளனர். வேறுசிலர் புதிய உலகம் நட்டமடையக்கூடாது என்னும் நன்நோக்கோடு 2-25க்கே விற்பனை செய்யுங்கள் என்றுகூறி ஊக்கமளித்துள்ளனர். பெரும்பாலானோர் புதிய உலகத்தை மாதசஞ்சிகை ஆக்குங்கள் என்ற கருத்தையே வலியுறுத்தியுள்ளனர். உங்கள் ஆசையை விரைவில் நிறைவேற்றி வைக்க முயற்சிக்கின்றோம் என்பதை அறியத்தருகின்றோம். உங்கள் அனைவரினதும் பேராதரவுகளுக்கு நன்றி;

**1981 தை மாதம் முதல் புதிய விலை விபரம்**

**தனிப்பிரதி ஒன்றின் விலை ரூபா 1-50**

வருட சந்தா (தபாற்செலவு உட்பட) ரூபா 10-00

— வெளியீட்டாளர்

# புதுமைப் பதில்

ஜேகன் அன்ரனி — கண்டி

உலகிலே நீதியின் அரசாட்சி எப்போ வரும்

அநீதியின் ஆட்சிகள் அஸ்தமிக்கும் போது.

*　　*　　*

விக்ரர் குமார் — நாரந்தனை

திருமதி சிறிமா பண்டார நாயக்காவின் குடியுரிமை பறித்த அரசுபற்றி உங்கள் கருத்து என்ன? இலங்கையின் தலைவிதி என்ன?

1948ல் தமிழர்களின் உரிமைகளைப் பறித்த இனம் இன்று தங்களுக்குள்ளேயே உரிமைகளைப் பறித்து விளையாடுகின்றது. இப்பொழுது அரசு சுற்றிச் சுற்றி உலகெலாம் கடன் பட்டு வருவதைப் பார்த்தால் எதிர்காலத்தில் இலங்கையின் உரிமைகள் எல்லாம் அயல் நாடுகளின் கையிலேதான் இருக்குமோ என்று அஞ்ச வேண்டியிருக்கிறது.

ஏ. பீற்றர் ராஜன் — உயிலூர்

உண்மை ஒன்றிருக்க உண்மைக்கு மாறுகவும், ஒழுக்கம், பண்பாடு, பாரம்பரியமற்றவர்களாய் இருந்து கொண்டு பெரிய மனிதர்களாக உலவுகின்றவர்கள் பற்றி புதிய உலகின் கருத்து என்ன?

புலித்தோல் போத்திய கழுதைகள்!

*　　*　　*

அலெக்ஸ். வி. — நாரந்தனை

நம் நாட்டில் (இலங்கையில்) "காதல்" என்ற மூன்றெழுத்தை ஏன் ஒரு இழுக்காக நினைக்கிறுர்கள்?

எம்மவர் மத்தியில் உண்மையான 'காதல்' இல்லாமல் அச்சொல்லை 'காமம்' என்ற மூன்றெழுத்து ஆக்கிரமித்திருப்பதனால் போலும்.

*　　*　　*

எஸ். ஜி. ஆர். — செம்மண்தீவு

ஆசிரியர், வைத்தியர் போன்ற வழிகாட்டிகளே மதுபானம் அருந்தி மயங்கும் நிலை பற்றித் தங்கள் கருத்துத்தான் என்ன?

இந்த இதழில் வந்துள்ள 'நொறுங்கிய இதயங்கள்' பகுதிக் கருத்தின் படி இவர்கள் இரக்கப் படவேண்டியவர்கள். என்றாலும் இவர்கள், நம்பி வருபவர்களின் வழிகாட்டிகளல்லகுழிகாட்டிகள்.

* * *

செல்வி அ. ஜெயிந்தா ரேசலின்
புதுக்கயம்

**ஒருவர் செழிப்பைக் கண்டு இன்னொருவர் பொறாமை அடைவதால் அவர்களுக்கு என்ன பயன்? இதுபற்றித் தங்கள் கருத்து,**

ஒருவனிடமுள்ள ஆற்றாமையே பொறாமைக்கு காரணமாக அமைகின்றது. அப்படி ஏற்படும் பொறாமை அடுத்தவனை விட தானும் முன்னேற வேண்டும் - வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற ஆக்க பூர்வமான போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துமாயின் நன்மையுண்டல்லவா?

* *

ஏ. மரிஸ்கலா — இனிநொச்சி

**விரதம் பிடிப்பதில் ஏதும் பலன் உண்டா?**

நிச்சயமாக உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பயன் உண்டு. உதாரணத்துக்குப் பாருங்கள் மூன்று வேளை உண்டு குடித்து வாழ்கின்றவர்களை விட பசியை அறிந்த ஏழைகள் உரமானவர்களாகவும், நோயைத் தாங்கக் கூடியவர்களாகவும் இருக்கின்றார்கள். பசிகிடந்து பாருங்கள் தத்துவங்கள் தானுகப் பிறக்கும்.

---

அன்பின் ''புதிய உலகம்'' வாசக அன்பர்களுக்கு அன்பு கலந்த வணக்கம்.

எனது ''அமெரிக்க அனுபவங்களை'' தொடர்ந்து இம்மலரிலும் எழுத முடியாமைக்கு மனம் வருந்துகிறேன். அடுத்த மலரில் இருந்து இக்கட்டுரைத் தொடர் தொடரும்.

ஆயினும் இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி வாசக அன்பர்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறந்த பொன்னுள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். மலரும் ஆண்டு எங்கள் நாட்டிற்கும், குறிப்பாக வாசக அன்பர்களுக்கும் ஒரு நல்ல ஆண்டாக, நம்பிக்கையூட்டி வளர்ச்சியைக் கொண்டுவரும் ஆண்டாக அமைய வாழ்த்துவதுடன் இறையருளை வேண்டி, அன்பு வணக்கம் கூறி விடை பெறுகிறேன் நன்றி - வணக்கம்.

கரவையூர்ச் செல்வம்
கார்த்திகை 25-1980

# உங்கள் பார்வை

விக்டர் குமார் — காவலூர்

கரவையூர் செல்வமவர்களே! ஜனாதிபதி நீகனின் வயது 74 அல்ல 69.. அவர் பிறந்த ஆண்டு 1911.

எஸ். புஸ்பராணி. — அந்திரேஸ் முதலியார் பரந்தன்

தனிநாயக அடிகளின் ஆக்கத்துடன், அவரது மறைவுக்கு அஞ்சலியும் இடம் பெற்றது பாராட்டுதற்குரியது.

செல்வி. ஹெலன் ரேசாறி வர்க்கின் எருவூ

பாராட்டுக்களையும், புறுபுறுப்புக்களையும் பாரபட்சமின்றி ஏற்றதோடு பயமுறுத்தல்களுக்கு அஞ்சாது பணிபுரியும் புதிய உலகமே ஈழத்தில் மலந்து உலரும் சஞ்சிகை மலர்களில் நீ ஒரு வாடா மலர்.

ஜி. ஏ. டேவிட், அடம்பன்

'வானம்பாடி' சுவையான கதை. அதை எழுதிய ஞானபண்டிதனுக்கு எனது பாராட்டுக்கள்

பி. ஏ. ராஜநாயகம் — நாரந்தனை

''பெண்களும் அதில் எமது பங்கும்'' கட்டுரை எழுதிய திரு. கே. ஆறுமுகம் ''நாம் செய்யும் சிறிய பிழைகளும் பெண்களைப் பாதிக்கும்'' என்று கூறிய அதே வாயால் ''சீதனத்தை மணம் முடித்த பட்டாதாரிக்குக் கிடைத்தது மாட்டுப் பெண்'' என்று பெண்ணை இழிவாகக் கூறலாமா?

ப. எமிலியான் — தலைமன்னர்

''ஒருமணம் திருந்துகின்றது'' ''வானம் பாடி'' தனிநாயக அடிகள் பற்றிய கட்டுரைகள் அனைத்தும் வெகு ஜோர். அடுத்த இதழுக்காக இலவுகாத்த கிளிபோல் காத்திருக்கிறேன்.

தாமதித்நாலும் புதிய உலகம் நல்ல கனியாகவே உங்களிடம் வரும் நிச்சயமாக இலவம் பஞ்சு போல்பறந்து விடாது

— ஆ ர்.

நரேஷ் வேதநாயகம் — ஊர்காவற்றுறை

குறுக்கெழுத்துப் போட்டியை குறுகக் கத்தரித்து விட்டீர்களா? பரிசு பெற்ற ஆடி-ஆவணி அட்டைப்பட விளக்கம் தருந்தபடி அமையவில்லை.

றேகன் அன்ரனி — கண்டி

நம் நாட்டின் பிரதான திருவிழாக்களின் மகிமை பற்றி திருவிழாக்களுக்கு முன்னரே ''மறை இயல்'' என்னும் பகுதியில் வரு

வது நல்லது. செல்வி. விக்னேஸ்வரியின் "நவராத்திரி மகிமை" பற்றிய விளக்கம் நன்று.

செ. ஞான ராஜன் —முருங்கன்

தனிநாயகம் அடிகள் போன்ற பெரியாரை மறந்துவிடாமல் "புதிய உலகம்" தொடர்ந்து அவர்களின் கருத்துக்களைச் சேர்த்து மணம் வீச வேண்டும்.

ஏ. பீற்றர் ராஜன் — உயிலங்குளம்

அமெரிக்க அனுபவங்கள் அருமையிலும் அருமை. சுவையாகவும், சூடாகவும் இருந்தது. பரிபூரணனின் வாழ்த்துப்பா கருத்துச் செறிவாக இருந்தது.

செல்வி. இ. மேரி மெற்றலின்
— புதுகுடியிருப்பு

"பெண்மையும் அதில் எமது பங்குகும்" கட்டுரையை எழுதிய நண்பர் கே. ஆறுமுகத்துக்கு எமது பாராட்டுகள்



## புதிய உலக வாசகநேயர்களுக்கு

எமது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறவே உங்கள் பார்வை பகுதிக் களத்தை அமைத்துக் கொடுத்துள்ளோம். உங்கள் கருத்துக்களை ஆவலோடு வரவேற்கின்றோம். ஆனால் எமது வாசகர்கள் பண்பான, நாகரீகமான முறையில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதையே வரவேற்கிறோம். ஒருசில வாசகர்கள் புதிய உலகம் தன் இலக்கைவிட்டு விலகிச் செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அவர்களுக்கு ஒன்றைக் கூறிவைக்க விரும்புகின்றோம்.

ஆன்மீகம் முதல் அரசியல்வரை எமது வாசகர்களை சிந்திக்க வைப்பது தான் புதிய உலகின் நோக்கம். புதிய உலகம் குறுகிய உலகமல்ல பரந்த உலகம். புதிய உலகம் படைப்பதாயின் தனியே மறை போதனை மட்டும் போதாது. முழுமனித உருவாக்கல் என்றால் அவனுக்கு ஆன்மீக சிந்தனையோடு அரசியல், பொருளாதார சிந்தனைகளும் வேண்டும். அதுவே புதிய உலகின் பணியுமாகும்.

— ஆர்

டாக்டர் J. A. மெனேசஸ் M. B. B.S., S. J.

எழுதிய

# இயற்கை முறைக் குடும்ப நலத் திட்டம்

நம்பத் தகுந்ததும், பாதுகாப்பானதும்
திருமண உறவை வளர்ப்பதும்
எல்லா மதக் கொள்கையினரும் ஏற்கக்கூடியதுமான

**ஆலோசனைகள் அடங்கிய கைநூல்**

**அருட்திரு சி. இ. நி. ஞானசீலன் அடிகளாரால்**
தமிழாக்கம் செய்யப்பட்டு
குடும்ப மேய்ப்புப் பணி நிலையத்தின்

12வது வெளியீடாக வெளிவந்துள்ளது

விலை ரூபா 2/- மட்டும்

வாங்கிப் படித்துப் பயன் பெறுங்கள்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி,

மறைக் கல்வி நடுநிலையம்
த. பெ. எண் 2
யாழ்ப்பாணம்

அருட்திரு சி.இ.நி.ஞானசீலன் அடிகள்
குடும்ப மேய்ப்புப் பணிநிலையம்
சேந்தாங்குளம்—இளவாலை

இம்மாதஇதழின் அட்டைப்பட விளக்கத்தை எழுதி

31– 12 – 80 –க்கு முன்னர் அனுப்பிவையுங்கள்.

**மிகச் சிறந்த விளக்கம் ஒன்றுக்குப் பரிசு உண்டு**

அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்
புதிய உலகம்
த. பெ. இல 2
யாழ்ப்பாணம்

*With the Best Compliments*

*of*

# PEE BEE FASHIONS LTD.

55, CHATHAM STREET

COLOMBO—1

T. PHONE 24127

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்